Registered as a Newspaper in Sri Lanka

# ஈழமுரசு

முரசு 2 17-3-1985 ஞாயிற்றுக்கிழமை (பங்குனி 4 - ஜ: ஆகிர் 24) முழக்கம் 41

## இந்திய பட்ஜட்டில் 9 கோடி ரூபா இலங்கை அகதிகளுக்கு!

பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசாங்கத்தினது முதலாவது பட்ஜட் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட போது இலங்கையிலிருந்து இந்தியா சென்றுள்ள அகதிகள் புனர் வாழ்வுக்கென்று தனியாக ஒன்பது கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. இந்திய மத்திய அரசின் பட்ஜட்டில் உத்தியோகபூர்வமாக இதற்கென நிதி ஒதுக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும். இதனைத் தவிர தமிழக அரசு ஏற்கனவே நான்கு கோடி பதினைந்து லட்சம் ரூபாவை செலவழித்துள்ளதாக அமைச்சர் நெடுஞ்செழியன் நேற்றுத் தெரிவித்தார். மத்திய அரசும் ஏற்கனவே மூன்று கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளது.

★ கடந்த சில மாதங்களில் இரண்டாயிரம் தமிழர் கொலை!

# படுகொலை தொடருமானால் வருட இறுதிக்குள் தமிழினம் அழிந்து விடுமென 'அமிர்' அச்சம்!

கடந்த சில மாதங்களில் இலங்கையில் இரண்டாயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் இந்த ஆண்டு முடிவுக்குள் இலங்கையில் தமிழினம் முற்றாக அழிந்துவிடும் என்று கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அச்சம் தெரிவித்துள்ளார்.

நேற்று திருச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசிய திரு அமிர்தலிங்கம் இப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு பாரத அரசு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்தியா வந்துள்ள இலங்கை அகதிகள் பாதுகாப்பான சூழ்நிலையில் திரும்பக்கூடிய வழிவகைகளைக் காண்பதும் பாரத அரசின் கைகளில் தான் தங்கியுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

படுகொலைகள் தினசரி தமிழ்ப் பகுதிகளில் நடைபெறுவதைச் சுட்டிக் காட்டிய திரு. அமிர்தலிங்கம், தமிழ் தீவிரவாத இளைஞர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சி நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

★ யாழ்ப்பாணக் குடாநாட்டில் அடுத்தடுத்து நடைபெறும்

# வர்த்தகர்கள் மர்மக் கடத்தல்; நேற்று ஆட்சேப கடையடைப்பு

## புடவை வர்த்தகரையும் மகனையும் விடுவிக்க இரண்டு கோடி ரூபா கேட்கின்றனராம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் வர்த்தகர்கள் அடுத்தடுத்து இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுப் பணயக் கைதிகளாக வைத்திருக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் யாழ். நகரிலுள்ள வர்த்தகர்கள் நேற்று முழுநாள் கடையடைப்பு நடத்தினர். முன்னறிவித்தல் எதுவுமின்றி கடையடைப்பு திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் பூரணமான ஹர்த்தாலாக வர்த்தகர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இதனை முன்னின்று நடத்தினர்.

நகரிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் இரு தினங்களுக்கு முன்னர் கடத்திச் செலலப் படடதாகவும், நேற்று முன் தினமிரவு கே. கே எஸ். வீதியில் புடவை வர்த்தகம் செய்யும் தந்தையும் மகனுமான இ வர் கடத்திச் செல்லப் பட்டதாகவும் யாழ்ப்பாண வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

நகரில் முப்பது வருடங்களுக்கு மேலாக புடவை வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த முதலாளியிடம் இரண்டு கோடி ரூபா பணயபபணம் கேட்கப் பட்டுள்ளதாகவும், இவர்களைக் கடத்திச் சென்றவர்கள் யார்

— 8ம் பக்கம் பார்க்க

### விசாரணையும் தீர்ப்பும்

வடபிரதேச போக்குவரத்துச் சபையின் சிரேஷ்ட அதிகாரி

— 8-ஆம் பக்கம் பார்க்க

### மீண்டும் கொள்ளை

ஈவினை அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடு தயாரிக்கும் தொழிற்

— 8-ஆம்கபக்கம் பார்க்க

## திருமலைப் பகுதியில் நேற்று எட்டுப் பெண்கள் கைது!

திரிகோணமலைப் பகுதியில் எட்டுப் பெண்கள் கைதுசெய்யபபட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. கடந்த இரு தினங்களாக இப்பகுதியில் நடைபெற்ற தீவிர தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரால் இவர்கள் கைதானதாகவும், இப்போது தீவிரவிசாரணைக்குட்படுத்தப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில் திடீர் முற்றுகை

## இரு வீடுகள் குண்டு வெடிப்பினால் தகர்ப்பு

கொக்குவில் கிழக்குப் பகுதி நேற்று அதிகாலை நான்கு மணிமுதல் நண்பகல் வரை சுற்றிவளைக்கப்பட்டுக் கடுமையான சோதனைக்குட்படுத்தப் பட்டது.

பெருந்தொகையான கசவ வாகனங்களில் வந்த சீருடையினர் பொற்பதி வீதி, கோவில் வீதி, ரயில்பாதை வீதி ஆகியவற்றை அடங்கிய பகுதிகளை

— 8-ஆம் பக்கம் பார்க்க

## எச்சரிக்கைக் கடிதத்தை 'புளொட்' மறுக்கின்றது!

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் திரு. இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜாவுக்கு அனுப்பப் பட்ட எச்சரிக்கைக் கடிதத்துக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று 'புளொட்' தெரியப்படுத்தியுள்ளது.

தமக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக சம்பந்தப் பட்டவர்கள் தம்மைச் சந்தித்தால் உண்மையை விளக்கத்

— 8-ஆம் பக்கம் பார்க்க

## தமிழக சர்வகட்சிக்குழு ராஜீவைச் சந்தித்து ஈழப் பிரச்சினை பற்றிப் பேசத் தயாராகிறது!

(சென்னை)

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து எடுத்துக் கூறுவதற்கு தமிழகத்தின் சர்வகட்சித் தூதுக் குழுவொன்று புதுடில்லி செல்ல ஏற்பாடாகி வருகின்றது.

முன்னர் இந்திரா காந்தியைச் சந்தித்து விளக்கிக் கூறியது போல இச்சந்திப்பு அமையும் என்றும், அதற்கு முன்னர் சர்வகட்சிகளினதும் கூட்டத்தைக் கூட்ட ஒழுங்கு செய்யப்படுமென்றும் தமிழக நிதி அமைச்சர் இரா நெடுஞ்செழியன் நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

நேற்றைய சட்டசபைக் கூட்டத்தில் பேரவையின் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. கே. அன்பழகன் முதலில் பேசும்போது, "இலங்கையில் போராடி வரும் தமிழ் மக்களுக்கு மத்திய அரசு உதவுவதற்கு முன்வர வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

பேரவையின் எதிர்க்கட்சித்

— 8 ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதி-தொண்டா நேற்று சந்திப்பு:

## அமைச்சரவை முன் தொண்டமான் இந்திய விஜயத்தை விளக்குவார்

(கொழும்பு)

அமைச்சர் எஸ் தொண்டமான் நேற்றுக்காலை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைத் தனிமையில் சந்தித்து தமது கடந்த வார இந்திய விஜயம் பற்றி எடுத்துக் கூறினர்.

இலங்கையில் இனப்பிரச்சினையும், அகதிகள் குடியேற்றமும் தமிழகத்தில் 'வெடிக்கும்' நிலையை உருவாக்கியிருப்பது பற்றியும் அமைச்சர் விளக்கமாக எடுத்துக்கூறி, இப்பிரச்சினைக்கு எந்தவித தாமதமுமின்றி தீர்வு காணவேண்டிய அத்தியாவசியத்தை சுட்டிக் காட்டினர்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஜனாதிபதி நேரில் சந்தித்து இவ்விடயம் பற்றி

— 8-ஆம் பக்கம் பார்க்க

### வழிமறித்துக் கத்திக்குத்து

(புத்தூர்)

புத்தூரிலிருநது சிமெந்து ஏற்றிக் கொண்டு பூனைவை

— 8-ஆம் பக்கம் பார்க்க

national weekly

வார மலர் விலை ரூபா இரண்டு

# கல்லூரிக் கொள்கைகளால் மாணவர் விரக்தி நிலையில்

(உடுப்பிட்டி)

''பாடசாலைகளில் இடம் பெறும் கொள்கைகள் மாணவர்களை விரக்தியடையச் செய்வதுடன் அவர்களின் சமூக உணர்வையும் பாதிப்புறச் செய்கிறது''

வடமராட்சி மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் காரணிகளுள் 'கல்வி' முக்கியமான ஒன்றாகும். எனவே கல்வியில் கவனம் செலுத்தத் தவறினால் அச்சமூகம் சீரழியும்''

'சட்டப்படி அதிகாரத்தில் இருப்பவர்களால் தமிழ்பேசும் மாணவர்களாகிய நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் தொல்லைகள், எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில் எமது கல்வி முன்னேற்றத்திற்காக நாளாந்தம் போராட வேண்டிய சூழ்நிலையில் இன்று உள்ளோம்'

இந்நிலையில் சமூக முன்னேற்றத்தில் அக்கறையற்ற சிலர் பள்ளிக்கூட மாணவர்களின் கல்வியில் கீழ்த்தரமான முறையில் கைவைப்பதை மிகுந்த வேதனையுடன் நாம் கருத்திற் கொள்கிறோம்.

இவற்றால் சகல மாணவர்களும் விரக்தியடைவதுடன் அவர்களது சமூக உணர்வும் பாதிப்புறுகிறது. எனவே சமூக நலனைக் கருத்திற் கொள்ளும் எவரும் இவ்விடயங்களில் திடமான அணுகுமுறையைக் கையாள்வதுடன் மாணவரது நலன்களிற்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முன்வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### சேவை

எப்பொருளானாலும் வாங்கவும், விற்கவும் ஒவ்வொரு நாளும் வாருங்கள் - ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

### பயிற்சி

ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங், French, Hotel Management பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. விபரங்களிற்கு JAFFNA TECHNICAL INSTITUTE, ஸ்ரான்லி வீதி, (மின்சார நிலைய கடவைக்கருகாமை) யாழ்ப்பாணம்.

### குத்தகைக்கு

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. இல் 900 சதுர அடி கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் 1.5.85 முதல் குத்தகைக்கு விடப்படும். கஸ்தூரியார் வீதியை முகப்பாகக் கொண்ட இக்கட்டிடம் மருந்துச் சாலை, புத்தகசாலை, தையல் நிலையம், பற்சிகிச்சை நிலையம், அலுவலகம் முதலியவற்றிற்கு ஏற்றது. கேள்விப் பத்திரங்களை ரூபா 25 செலுத்தி வை. எம். சி. ஏ. அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### விற்பனைக்கு

அல்சேஷன் pups Pure Bred S L 70 HONDA Motor Byke உடன் விற்பனை. பழைய பூங்கா வீதி; 181 கோவில் வீதி, நல்லூர்.

### தவறிவிட்டது

திருநெல்வேலி திருமதி. த. மதியாபரணம் அவர்களின் தேசிய அடையாள அட்டை உருப்பிராய் பிள்ளையார் கோவிலுக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் காணாமல் போய்விட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஈழமுரசு காரியாலயத்தில் அல்லது மேற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## அரியாலையில் தொழிற்சாலை

(அரியாலை)

இலங்கை பனை அபிவிருத்திச் சபை அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் பனம் பழப்பானம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து நடாத்தி வருகிறது. எந்தவொரு தனியார் ஸ்தாபனங்களுடனும் கூட்டுச் சேராமல் தனித்துச் சபையால் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் தயாரிப்பு எங்கும் பெறக் கூடியதான வசதி செய்யப்படுமென அறியப்படுகிறது. இத் தொழிற்சாலை முன்பு பனங்கட்டி தயாரிப்பதற்காகப் பயன்பட்டு வந்தது.




✳ கொழும்பு மேட்டுத்தெரு, வரதராசா ஞானேஸ்வரி தம்பதிகளின் மகன் பிரசன்னாத் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஏழாலை மேற்கு, பொன்னம்பலம் - பரமேஸ்வரி தம்பதிகளின் மகன் சுரேந்திரன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்

✳ யாழ். சோனகதெரு. ஹனிபா - சனூப்பா தம்பதிகளின் புதல்வன் சாகுல் ஹமீட் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

✳ வடலியடைப்பு, அப்புத்துரை - சரோஜினி தவி தம்பதிகளின் மகள் சுதர்சினி இன்று தனது ஆறுவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✳ காரைநகர் நடுக்காடு அம்பலவாணர் மங்கையற்கரசி தம்பதிகளின் மகன் இந்திரகுமார் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ நாரந்தனை தெற்கு, ஜோன் வெஸ்லி - செலஸ்ரினா தம்பதிகளின் மகன் அருண் ஜெயநாத் தனது நான்காவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

✳ சந்தர்மடம் பழம் ரோட், திருநாவுக்கரசு - திலகவதி தம்பதிகளின் மகள் சுமித்திரா தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

அச்சுவேலி சந்தையில்

# விவசாயிகளுக்கு நஷ்டம் தரகர்மாருக்கு இலாபம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பொதுச் சந்தையில் தரகர்கள் தொல்லை அளவுக்கதிகம் என புகார் செய்யப்படுகிறது. பொதுமக்கள் பொருட்களை விற்கும்போதும் வாங்கும்போதும் இவர்களின் நெருக்குதலுக்கு உள்ளாகித் தவிக்கின்றனராம்.

யாழ். அபிவிருத்திச் சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தின் பரிபாலனத்தில் உள்ள பொதுச்சந்தை வருடாந்தக் குத்தகைக்கு கொடுக்கப்பட்டு குத்தகைக்காரரினால் வரி வசூலிக்கப்படுகிறது. குத்தகைக்காரர் பொருள் விற்பவர்களிடம் பெற்றுக்கொள்ளும் குத்தகை வரியிலும் பார்க்க கூடியளவு பெறுமதியான பொருட்களையும், வேறு உதவிகளையும் தரகர்கள் பெற்றுக்கொள்கின்றனராம்.

''விவசாயிகளின் விளைபொருட்களின் விலைமிகவும் குறைந்துள்ள இந்தவேளையில் தரகர்கள் ஊடுருவல் பெரும் தொல்லையாக இருக்கிறது'' எனக் கூறப்படுகிறது.

வறுமையில் வாடிய மீனவருக்கு

# 3 அமைப்புக்கள் இணைந்து உணவுப் பொருள் வழங்கின

(அச்சுவேலி)

மீன் பிடித்தொழில் இன்றி பாதிப்புக்குள்ளான மீனவர் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பார்சல்களை றெட்பானா, போரூட், சர்வோதயமாகியன இணைந்துகூட்டாகவழங்கின.

பத்தமேனி - இடைக்காடு, கிராமசேவையாளர் பகுதிகளில் உள்ள வளலாய். சிவன் கோவில் அடைப்பு ஆகிய பகுதியில் வசிக்கும் மீன் பிடித் தொழில் செய்து வாழ்ந்து வந்த நூற்றுப்பதினைந்து குடும்பங்கள் கடல் கண்காணிப்பு வலயத்தால் தொழில் இன்றி கஷ்டப்பட்டு வந்தன.

இந்தக்குடும்பங்களுக்குஉதவி செய்யும் நோக்குடன மேற்படி மூன்று அமைப்புகளும் இணைந்து பால்மா, அரிசி, பருப்பு உள்ளடங்கிய அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொண்ட பார்சல்களை வழங்கின. றெட்பானா ஸ்தாபனத்தின் வடபிராந்திய அமைப்பாளர் திரு. எஸ். சேனாதிராசா தலைமையில் உணவு வழங்கும் வைபவம் நடைபெற்றது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்டிணர் இடைக்காடு பத்தமேனி பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஆ. ந. இராசேந்திரன், கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ். ஆனந்தன், பத்தமேனி இடைக்காடு கிராமசேவையாளர் திரு. எஸ். செல்லத்துரை ஆகியோரும் உணவுப்பொருட்கள் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

## குடும்பத்துக்கு நிதி உதவி

(அரியாலை)

நெடுங்கேணி வற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரியாக இருந்து அண்மையில் காலமான திரு. எஸ் யோண்பிள்ளையின் குடும்பத்திற்கு ரூபா 2050 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மேற்படி திணைக்கள ஊழியர்களால் திரட்டப்பட்ட இந்நிதியைத் திணைக்களப் பிரதி ஆணையாளர் திரு சொ. கருணைநாதன் தமது காரியாலயத்தில் வைத்துக் கையளித்தார்.

## கும்பாபிஷேகம்

(ஏழாலை)

எதிர்வரும் 27ம் திகதி காலை காரைநகர் மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. நயினை ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா குருவாகப் பணியாற்றுவார்.

## பிரஜைகள் குழு உருவானது

(அச்சுவேலி)

பத்தமேனி - இடைக்காடு பகுதிக்கான பிரஜைகள் குழுவின் அங்குரார்ப்பணக்கூட்டம் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. ஆ. ந. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் விபரம்:- திரு. ஆ. ந. இராசேந்திரன் (முன்னாள் யாழ்-அபிவிருத்திச் சபை தலைவர்) துணைத்தலைவர்கள்:- திரு. சி. சுந்தரலிங்கம் (அதிபர்) திரு. செ. செல்லையா (இணக்க சபைத் தலைவர்) செயலாளர் திரு. ச. க. ஆறுமுகம் (சமாதான நீதவான்) உப செயலாளர் திரு. செ. சிவப்பிரகாசம் பொருளாளர் திரு. தா. சிவலிங்கம் பதின்மூன்று பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## மீனவருக்குப் பொருளுதவி

(சுழிபுரம்)

கடற் பாதுகாப்புச் சட்டங்களால் சுழிபுரம் பகுதியில் பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு உதவும் வகையில் இப்பகுதிப் பிரஜைகள் குழு மீனவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் பாதிப்புகள் பற்றிக் கேட்டறிந்ததுடன் சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களையும் அண்மையில் வழங்கியது.

மேலும் உதவிகளை வழங்கும் பொருட்டு போரூட், றெட்பானா, சர்வோதயா போன்ற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக குழுவின் செயலர் சு. தவச்செல்வம் தெரிவித்தார்.

# தனியார் மருத்துவ கல்லூரி தெல்லிப்பளையில் அமையும்?

(ஏழாலை)

தெல்லிப்பளையில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கல்லூரி அமைவதற்கான நிலத்தைத் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்திய சாலையினர் உபகரிப்பர் எனத் தெரியவருகிறது.

கடந்தவாரம் தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பது சம்பந்தமான ஒரு கூட்டம் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் டாக்டர்கள் பிலிப், சேவியர் ஆகியோருடன் கூட்டுறவு வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்களும் பங்கு பற்றினர். தனியார் மருத்துவக் கல்லூரி அமைவதற்குத் தெல்லிப்பளை பொருத்தமான இடமாகுமென்றும், அயலில் தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியுமிருப்பதால் பயிற்சிபெறும் மருத்துவ மாணவர்கள் புது முறைப் பயிற்சிக்கு அது பயன் படுமென்றும் கூறப்பட்டது.


## உங்கள் காசோலைகளை பணமாக மாற்ற...

உங்கள் அன்றாட வாழ்க்கையில் காசோலைகளைப் பணமாக்கலும் பாதுகாப்பாகப் பேணுதலும் தவிர்க்க முடியாத தேவைகளாகும்! சிரமற்ற சேவைகளால் அவதிப்படும் உங்கள் உதவிக்கு தமிழர் நிதியம் நாணய முறித்திட்டத்தினை இன்றே நாடுங்கள்!

### நாணய முறித் திட்டம்

உங்கள் பணம் அல்லது அரசாங்க, கூட்டுத்தாபன, ஓய்வூதியக் காசோலைகளைச் செலுத்தி பணத்திற்கு ஈடான நாணய முறிகளாக மாற்றிக் கொள்ளுங்கள்!

### உங்கள் உடனடிப் பணத் தேவைக்கு

தமிழர் நிதியத்திலேயே இந்நாணய முறிகளை உடனடியாகவோ பின்னரோ பணமாக்கலாம் அல்லது வேறு எவருடனுமோ பரிவர்த்தனை செய்யலாம்!

மேலதிக விபரங்களுக்கு

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437



சுழிபுரத்தில்

'ஈழமுரசு'

பிரதிகளுக்கு

ஸ்நைலாக் ஏஜென்சி
பிரதான வீதி,
சுழிபுரம்.




கலர் பிலிம் சுருள்களை

PROCESSING + PRINTING

செய்வதற்கு

கொழும்பு ஸ்ருடியோ




# நீக்ரோ மக்களின் உணர்வும் கருமை இலக்கியங்களும்

சபா. ஜெயராசா எம். ஏ.

''கருமை இலக்கியங்கள்'' என்பவை நீக்ரோ மக்களின் விடுதலையுணர்வின் ஆக்க வெளிப்பாடுகளாக மலர்ச்சி கொண்டன. நிறவேறுபாடு காரணமாக நசுக்கப்பட்ட நீக்ரோ இனத்தின் கலைவெளிப்பாடுகள் பொங்கியெழுந்தன. அந்த இனத்தின் இருள் தோய்ந்த துயரங்களைக் ''கருமை'' என்ற சொல் வெளிப்படுத்தியது.

மத்திய ஆபிரிக்காவிலிருந்த நீக்ரோ மனிதச் செல்வங்கள் வட அமெரிக்காவில் விலை கூறி விற்கப்பட்டன. சுரண்டல் அமைப்பு மானுடத்தை விற்பனைப்பொருளாக்கியது. வர்த்தகப் பண்டமாக்கப் பெற்ற நீக்ரோ மக்கள், குழந்தையும் குட்டியுமாகக் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டு ஐக்கிய அமெரிக்காவில் மலிவு விலையில் விற்கப்பட்டனர். அடிமை வர்த்தகத்தில் மனிதன் விற்பனைப் பொருளாக்கப்பட்டமை மட்டுமன்றி அவனுற் பிறப்பிக்கப் படத்தக்கதான உழைப்பு வலுவும் விற்கப்பட்டது. எதுவிதமான கூலியும் வழங்கப்பெருது அவர்கள் வேலை வாங்கப்பட்டார்கள். ஐக்கிய அமெரிக்காவிலே பண்ணை அடிமைகளாக்கப் பெற்ற நீக்ரோக்களின் உடலும் உயிரும் அந்த மண்ணிலே ஆழப் புதைந்தன.

மனிதன் ''ஹோமோ சப்பியன்ஸ்'' என்ற இனத்திலிருந்து படிமலர்ச்சி கொண்டவன் என்றும், உலகின் பல்வேறுவித காலநிலை வேறுபாட்டு நிலைகளில் நீண்டகாலம் வாழ்ந்தமையால் நிறவேறுபாடுகள் தோன்றினவென்றும் மனித உளத்திறன் அனைவர்க்கும் ஒப்பானதென்றும் உயிரியல் ஆய்வுகள் விளக்கின. பெரும் பண்ணைகளையும், உற்பத்திச் சாதனங்களையும் வைத்திருந்த ஐக்கிய அமெரிக்கத் தனவந்தர்கள் இக்கருத்தை ஏற்காது நீக்ரோ மக்களைக் கொடூரமாகச் சுரண்டினர். இந்த முரண்பாடுகள் கலை இலக்கியங்களின் கருப்பொருளாயின.

அத்தகைய சூழலில் நீக்ரோ மக்களும் முரண்பாடுகளைக் கருப்பொருளாக்கினர்; நீக்ரோக்கள் அல்லாத மனிதாபிமானிகளும் மானுடத்துக்கு விடுக்கப்பட்ட அந்த அறைகூவல்களைக் கலை இலக்கியப் புனைபொருளாக்கினர்.

கலை இலக்கியத் திறன்களின் அடிப்படையைக் கவி-புத்திறன்களைக் கல்வி மூலமே வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. இன்னலும் இடைஞ்ஞலும் மிக்க சூழலிலே தரத்திற் குறைந்த கல்வி வழங்கப்பெற்ற ஆரம்பக்கால நிலைமைகளிலே எழுத்தறிவு பெற்ற நீக்ரோக்களால் ஊமைகளாக இருக்க முடியவில்லை. உண்மைகளை மூடி மறைக்கவும் முடியவில்லை. கண்டுங்காணுமல் இருக்கவும் இயலவில்லை.

''போஸ்ரன் சூரியன்'' என்ற பெயரில் ஐக்கிய அமெரிக்காவில் முதன் முதல் வெளிவந்த நீக்ரோ இதழ் அவலங்களை எழுத்து வடிவமாக்கியது. கனதியான உள்ளடக்கம் நீக்ரோக்களின் கலை, இலக்கியங்களின் தரத்தை உயர்வடையச் செய்தது. உலக இலக்கியப்பரப்பில் அவர்களின் கருமை தோய்ந்த இலக்கியங்கள் என்றும் அழியாத உயிர் மூச்சுக்களாக இயக்க வடிவங்கொண்டுள்ளன. சட்டங்கள் சமத்துவத்தைக் கொடுத்தாலும் நிஜ வாழ்வில் அவை ஏட்டுச்சுரக்காயாயின.

> இலக்கியத்தின் இரண்டாவதுபிரிவு இருளில் நிகழும் உராய்வுகளிலிருந்து பிறக்கும் அக்கினிச் சிதறல். இவை கொடுமைகளை நயந்து சுவைக்காது அவற்றுக்கு எதிராகக் கிளர்ந்தெழும்பும் எதிர்த்தாக்க வலுவைக் கொண்டது.

கடின உழைப்பும் சோகங்களின் மத்தியிலே கட்டியெழுப்பப்பெற்ற தியாகங்களும் அவர்களின் ஆற்றல்களை உயர்ந்தோங்கச் செய்தன. முதலாம் உலகப் பெரும் போரைத் தொடர்ந்து இந்த வெளிப்பாடுகள் மேலும் மேலும் துலக்கமடைந்தன. இலக்கியம், விளையாட்டு, கலைகள் போன்ற துறைகளில் நீக்ரோக்களின் வியத்தகு ஆற்றல் மலர்ச்சிகள் கதிகொண்ட வேகத்திற்கு எதிராக வெள்ளை இனவெறியர்களினுல் அணையிட முடியாதிருந்தது.

கருமை தோய்ந்த கலை இலக்கிய ஆக்கங்களில் இருமைப்பாடான வளர்ச்சி நிலைகளைக் காண முடியும். அவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது சோகம் தழுவிய உணர்வுகள். பலகை வீடுகளிலே நொந்து சிவந்த வாழ்க்கை முறையும், ஏமாற்றமும் புறக்கணிப்பும் நிரம்பிய சோகமும், துன்பங்களின் கூவலிலே மனம் முறிந்து வெதும்பி நிற்றலுமாகிய இருள் சூழ்ந்த கருமைப்புலம் ஒரு பிரிவாகக் காணப்படுகின்றது.

இலக்கியத்தின் இரண்டாவது பிரிவு இருளில் நிகழும் உராய்வுகளிலிருந்து பிறக்கும் அக்கினிச் சிதறல். இவை கொடுமைகளை நயந்து சுவைக்காது அவற்றுக்கெதிராகக் கிளர்ந்தெழும்பும் எதிர்த்தாக்க வலுவை கொண்டது. நீக்ரோக்களின் திரண்டெழுந்த இரும்புச்சலாகை போன்ற உடற்கட்டும் அதிர்ந்து அதிர்ந்து கொட்டும் பறைகளாய் ஒலிக்கும் அவர்களது குரல் ஒலியும் ஆற்றல்களை வடித்தெடுக்கும் சிந்தனையும் சமூக அவலங்களை அடிதலையாக மாற்றியமைக்கும் இலக்கிய வேகத்தைக் கொடுத்துள்ளன. இத்தகைய பின்னணியுடையோரே ''கருமை எழுவியோர் வலு'' (பிளாக் பவர்) என்ற ஆவேசத்தை மீட்டுகின்றனர்.

''கருமையே அழகு நிறைந்தது'' என்ற தொடரினை வலியுறுத்தும் வகையிலே நிரைப்பட ஆக்கங்கள் வளர்ந்தமையும் குறிப்பிடக் கூடியனவே.

கருமை இலக்கிய ஆக்கங்களிலே நீக்ரோ பெண்மணிகளும் பங்கு கொள்ளும் செயல் சமூக வளர்ச்சியிலே ஒரு பிரதான இயல்பாகும். மாக்கிறேட் உவாக்கர், நிக்கி கியோவாணி, திருமதி பேர்ள் போன்ற பெண்பாற் கவிஞர்கள் கருமை தழுவிய நீதியை உலகிக்குக் காட்டினர்கள்.

கருமை இலக்கியங்களைத் தமிழிலே தருவதற்கு சமகாலக் கவிஞர்கள் பலர் முயற்சி செய்தனர். மு. கனகராஜன், ஈழவாணன், நுஃமான், கே. எஸ். சிவகுமாரன், என். சண்முகலிங்கன் போன்ருேர் இவ்வகையிலே குறிப்பிடத்தக்கவர்கள்.

தெளிவான கண்ணேட்டத்துடன் கருமை இலக்கியங்கள் பற்றி ஆராய்ச்சி செய்வதும், மூலமொழியில் வெளியிடப்பட்ட உணர்வுகளைத் தமிழாக்கஞ் செய்து தருதலும் நமது இலக்கிய வளர்ச்சிக்குரிய தேவைகளிலே குறிப்பிடப்பட வேண்டியுள்ளன.

''பிதாவே! நான் யாரையும்
வெறுக்கவே யில்லை
ஆயின் நான்
வெறுக்கப் படுகின்றேன்.
நான் யாரையும்
துன்புறுத்தவே யில்லை!
ஆயின் நான்
துன்புறுத்தப் படுகின்றேன்''

என்ற சீமன் கோட்டரின் கருமைக் கவிதையின் ஒரு பொறி மானுடத்தின் உணர்வுகளைத் தட்டியெழுப்புதல் உலகக் கவிதைவேகத்தை விசைப்படுத்திவிடுதலும் நாம் அறிந்து கொள்ளவேண்டிய அனுபவம் தான்.

## புத்தனைத் தேடிப் போகிறேன்..

புத்தனைத் தேடி
போகிறேன்... ..
பிம்பிசாரனின்–
யாகப் பலி நிறுத்திய
புத்தனைத் தேடி
போகிறேன்... ...
நம் நாட்டின்
இனப்பலி நிறுத்த!

புனிதமான போதி
மரங்களுக்குள் – !
புனிதமான புத்தனைத்
தேடிப் போகிறேன்
நம் நாட்டின்
இனக் கொலையின்
வரலாற்றை .....
எடுத்துரைக்க!

மகனை இழந்த
தாயின்–துயர்
துடைத்த.......
புத்தனைத் தேடி
போகிறேன்......
பிள்ளைகளைப் பறிகொடுத்த
தாய்க் குலத்தின்
துயர் கூற!

● புங்கையூர்
எஸ். பத்மினி

## வரதரின் கனவில் நனவான

# மறுமலர்ச்சிச் சங்கம் மலர்ந்தது

''யாழ்ப்பாணத்து இலக்கிய இளைஞர்களின் இலட்சியக் கனவொன்று நனவாயிற்று'' என்று தொடங்குகிறது தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கத்தின் ஆரம்ப கூட்ட அறிக்கை கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் பின்நோக்கிப் பார்க்கிறேன்.

பிற்காலத்தில் 'மறுமலர்ச்சி' என்ற பத்திரிகையைப் பற்றியும் அதை நடாத்திய மறுமலர்ச்சிச் சங்கத்தார் பற்றியும் ஈழத்து இலக்கிய வளர்சிச் பற்றி எழுதுவோரும் பேசுவோரும் ஓரளவு சிறப்பாகக் குறிப்பிடத் தவறுவதேயில்லை.

ஆனுல் அது தொடங்கிய காட்சி அதைத் தொடக்கிய இளைஞர்கள் 'பிற்காலத்தில்' எழுத்துத் துறையில் அவர்களின் வளர்ச்சி, அவர்களது ஆக்கபூர்வமான இலக்கியப் படைப்புகள் ஒவ்வொன்றும் திரைப்படம் போல என் மனத்திரையில் விரிகின்றன.

திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களால் ஈழகேசரி இளைஞர் சங்கம் என்ற பண்ணையில் வளர்க்கப்பட்ட எழுத்தாள இளைஞர்கள் (அநேகமாக இருபது வயதுக்குட்பட்டோர்) அவர் ஈழகேசரியை விட்டு வானெலிக்குப் போனபின் சரியான கட்டுக்கோப்பின்றி ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்கள். தங்கள் மனக்கருத்தை வெளியிடவோ மற்றையோரது படைப்புக்களை பற்றி அலசிப் பேசவோ அவர்களுக்கு வாய்ப்புக்கள் இருக்கவில்லை. அந்தக்காலம் பற்றி தி ச வரதராசன் ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறுர்:

'இப்பொழுதெல்லாம் இடறி விழுந்தால் ஒரு எழுத்தாளர் மீதுதான் விழ வேண்டும்' தவறி வேறிடத்தில் விழுந்தால் அங்கே எப்மீது மோதுவதற்கு ஒரு விமர்சகர் காத்துக் கொண்டிருப்பார். ஆனுல் அந்தக் காலத்தில், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னுல், நிலைமை வேறு. ஒரு எழுத்தாளனையோ இரசிகனையோ கண்டு விட்டால் ஏதோ ஒரு புதையலைக் கண்ட மாதிரி. நாலு எழுத்தாளர்கள் கூடி விட்டால் நேரம் போவதே தெரியாது...'

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏதாவது செய்து பார்க்கலாம் என்ற நினைவோடு தி ச. வரதராசன் அவர்கள் 1943ம் ஆண்டு ஆனி மாதம் ''புதுமைப் பித்தர்கள் சங்கம்'' என்ற பெயரில் ஒரு சங்கம் கூட்ட எண்ணி உள்ளதாகவும் எழுத்தாளர்களை அதில் கலந்து கொள்ளும்படியாகவும் ஈழகேசரிப் பத்திரிகையில் ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

## கனக. செந்திநாதனின் பசுமை நினைவுகள்

பெயர்– 'புதுமைப்பித்தர்கள் சங்கம்' – ஒரு மாதிரியாகவே இருந்தது.

அக்காலத்திலே யாழ்ப்பாணத்தில் ஆக்க இலக்கியச் சிந்தனையுள்ள எழுத்தாளர்களும் குறைவு. எனினும் பதின்நான்கு எழுத்தாளர்கள் ஆரம்ப கூட்டத்திற்கு சமுகம் அளித்திருந்தனர். 13-6-4ம் திகதி கூடிய அந்தக் கூட்டம் ஒரு கல்லூரியிலோ அல்லது வாசிகசாலையிலோ அல்லது பெரிய அறையிலோ, மேசை வாங்கு போட்டு ஆடம்பரமாகக் கூடவில்லை. ஆடம்பரமற்ற எளிய முறையிலே ஒரு பெரிய வீட்டின் விருந்தையிலே கூடியது. அந்த வீட்டின் பெரிய விருந்தையை கூட்டம் நடாத்த உபகரித்த அன்பர் ரேவதி குப்புசாமி, அருமையான விக்கிரகங்களை வார்க்கும் தொழிலாளி. தன் தொழிலிலும் இலக்கியத்திலும் இன்பம் காண்பவர். பிரமச்சாரி, எனவே தாராளமாக முழுமனதுடன் ஒத்துழைத்தார். இப்போதும் யாழ்ப்பாணப் பட்டினத்திலே இலக்கிய ஆலோசனைக் கூட்டங்களை நடாத்த இலக்கிய அன்பர்கள் படும் சிரமங்களை எண்ணிப் பார்க்கும்போது அக்காலத்தில் மனமகிழ்வோடு எழுத்தாளர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து இடந்தந்துதவிய ரேவதி குப்புசாமி அவர்களது பெருந்தன்மையை வியக்காமல் இருக்க முடியவில்லை.

செம்மா தெரு 145 ஆவது இலக்கமுள்ள வீட்டின் விருந்தையிலே கூடிய எழுத்தாள இளைஞர்களில் அநேகர் கிராமப் புறத்தைச் சேர்ந்தவர்கள். பல பல ஊரிலும் இருந்து வந்தவர்கள். இலக்கியமே மூச்சாக இருந்தபடியால் பிற்காலத்தில் இப்போதும் கூட முன்னணி எழுத்தாளர்களாகத் திகழ்கிருர்கள். அந்த இளைஞர்கள் யார்? இதோ அவர்களின் பெயர்களைப் பாருங்கள்.

அளவெட்டி.– அ செ. முருகானந்தன் அ ந. கந்தசாமி, உருத்திரமூர்த்தி (மகாகவி), பொன்னுலை: தி.ச. வரதராசன்,

— 7ம் பக்கம் பார்க்க

# உள் ஈரம் பச்சை

கே. டானியல்

'சரித்திரப் பிரசித்தி பெற்ற' ஐம்பத்தி எட்டாம் ஆண்டு வகுப்புக் கலவரம் என் நினைவிற்கு வரும் போதெல்லாம் இந்தச் சம்பவமும் என் மனதுக்கு வரும். ''இந்தச் சம்பவத்தை வெளிக்கொண்டு வருவோமா; விடுவோமா'' என்று என் மனதுக்குள்ளேயே நீண்ட காலம் வைத்துக் குமைத்துக் கொண்டிருந்த 'இதை' இப்போது வெளிக் கொண்டுவர முடிவு செய்து விட்டேன். ஏனெனில் இப்போது உள்ள நிலையில் சாவு எப்போதும் வரலாம்; அதுவும் அகாலச் சாவாகவரலாம். எனவே நீண்ட இருபத்தைந்து ஆண்டுகளாக என் நெஞ்சுக்குள்ளே உயிரோடு கிடந்த இதைச் சாகவிடாமல் நெஞ்சை விட்டு எடுத்து வெளியே வைக்கிறேன். முன் கூட்டியே இது வெளியே வைக்கப்படுவது எல்லோருடையதும் எதிர்காலத்திற்காகவுமே!



கிழடுகட்டை, குஞ்சுகுருமான், குமரன் குமரி என்ற விதத்தில் முன்நூறுக்கு மேற்பட்டவர்கள் கையில் அகப்பட்ட பெட்டி கடகம், பாய்ச் சுருள்களுடன் விம்மி வெடித்துக்கொண்டு வந்து சேர்ந்து விட்டனர். இவர்களுக்கெல்லம் ''பாதுகாப்பு'' என்ற தோரணையில் நான்கைந்து உத்தியோகத்தர்கள் ஆயுதபாணிகளாக வந்தும் போயும் கொண்டிருந்தனர்.

இந்த உத்தியோகத்தர்களில் தமிழர்களும் சிங்களவர்களும் கலந்திருந்தனர். காக்கிச் சட்டையில் இருப்பவர்களுக்குள் இனவேறுபாடுகளைக் காண்பது மிகக்கடினமானது தான். அவர்கள் எல்லோருமே தமிழிலும் சிங்களத்திலும் சரளமாகப் பேசினார்கள்.

நான்கு நாட்களுக்கு முன் கண்டிப் பகுதியில் நடந்த வகுப்புக் கலவரத்தில் அகப்பட்டு, அடி உதைபட்டு; வீடு வாசல் எரிக்கப்பட்டு அரசின் தற்காலிகமான தார்மீக ஏற்பாட்டின் பேரில்தான் பாதுகாப்புக்காக அந்தப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்.

காடுகள் அழிக்கப்பட்டு விவசாயப்பிரதேசமாக ஆக்கப்பட்டிருந்த அந்தப் பகுதி நாட்டின் வடபகுதியிலிருந்து ஏற்கனவே குடிபெயர்ந்து வந்தவர்களின் ஆளுமைக்கு உட்பட்டிருந்தது. அந்தப்பகுதிக்கெனக் கட்டப்பட்டிருந்த கீழ் வகுப்பு மாணவர்களுக்கான பள்ளிக்கூடத்தின் படிப்புத் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட அந்தச் சின்னஞ் சிறிய மண்டபத்துக்குள்ளேயே 'அகதிகள்' என்ற அத்தனை பேரும் நிறைக்கப்பட்டிருந்தனர்.

இரவோடிரவாக அவர்கள் வந்து சேர்ந்த மறுநாள் பகல் பொழுதில் அந்தப் பகுதிக் கிராமச் சங்க உறுப்பினர்களும், நான்கைந்து மைல்களுக்கப்பால் உள்ள பட்டின சங்கத் தலைவர் தலைமையில் நான்கு உறுப்பினர்களும் வந்து போயினர். அவர்கள் அகதிகளைத் தரிசித்து விட்டுப் போனதனால் பெருமனது பண்ணி நடுப்பொழுதுப் போஜனமாக வெட்டப்பட்ட பாண் துண்டுகளையும், அதோடு சேர்த்துக் கடித்துக் கொள்ள வாழைப் பழக் குலைகள் இரண்டையும் அனுப்பி வைத்தனர்.

அகதிகள் ஆளுக்கொரு பாண் துண்டையும், தலைக்கு ஒரு பழத்தையும் எடுத்துக் கொள்ள வகைக்குச் சரியாக இருந்தது. வந்தவர்களுடைய 'கணக்கு' தவறவில்லை. அதற்கு மேல் குடிப்பதற்காக அவர்கள் எதையும் அனுப்பவில்லை. ''பாடசாலைக்கான குடிநீர்க் கிணறு ஒன்று இருக்கிறது'' என்ற கணக்கும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

கடந்து போய்விட்ட துர்ப்பாக்கியமான அந்த நான்கு நாட்களில் தேசத்தின் தென் பகுதியில் தொடங்கிய கலவரத்துடன் எத்தனையோ தென் பகுதி மாகாணங்கள் எங்கும் பரவி, பல இடங்களுக்கும் விரிந்து சென்று ஆங்காங்கே கடை கண்ணிகளையும், தொழிலகங்களையும் வைத்திருந்த தமிழர்களைத் தாக்கியதால் வாகன வசதியுடன் வாழ்ந்தவர்கள் வட பகுதிக்குத் தப்பிவிட, பல செல்வந்தர்கள் அவ்வப் பகுதிச் சிங்களச் செல்வந்தர்களின் ஆணைக்குட்பட்ட இடங்களில் அவர்களின் பாதுகாப்புகளுடன் சங்கமமாகி விட, பெரு வசதியற்றவர்கள் சிலரின் கைகளில் அகப்பட்டு உயிர்களையும் சிறு உடைமைகளையும் இழந்துவிட, மிகுதியானோர் தடடுத் தடுமாறி தமிழ்ப் பகுதிக்கு வந்து சேர்ந்து விட்டவர்கள் கணக்கில் இந்த முன்நூறுக்கு மேற்பட்ட ஜீவன்களையும் இவர்கள் சேர்த்துக் கொண்டனர். அது போதும்!

இரவு வந்தது.

பாடசாலையைச் சுற்றி அங்குமிங்குமாகக் காட்டு விறகுகள் கொளுத்தி விடப்பட்டிருந்தன.

காட்டுவிறகு வெப்பத்திலும், வெளிச்ச வெது வெதுப்பிலும், பயப்பீதியில் சுருங்கிப் பாய் விட்ட இந்த ஜீவன்கள் யாவும் மண்டபத்துள்ளும் வெளியேயும் சுருண்டு போய்க் கிடந்தன.

நான்கைந்து உத்தியோகத்தர்கள் காவலுக்கு இருந்தனர்.

அவர்களுக்கென மட்டும் ஒரு ஜீப் வண்டியில் விசேஷமாக உணவு வந்தது.

அவர்கள், வயிறு புடைக்க உணவெடுத்துவிட்டு சிகரட்டுகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் புகைத்துக் கொண்டிருந்தனர்.

நடு இரவுக்கு மேலாகி விட்டது.

தொலையில் – வயல்பரப்புக்கு நடுவே இடப்புற வெளிக் கூடாக நான்கைந்து வெளிச்சங்கள் தெரிந்தன.

அவைகள் வர வரச் சமீபித்தன.

உத்தியோகத்தர்கள் உஷாராகிக் கொண்டனர்; தங்கள் துப்பாக்கிகளைத் தயார் நிலைக்கு வைத்துக் கொண்டனர்.

வெளிச்சங்கள் சமீபிக்கச் சமீபிக்க அந்த வெளிச்சங்களில் ஐந்தோ பத்தோ தலைகள் தெரிந்தன.

மறுபடியும் ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப்போவதாக விழிப்பாய் இருந்த அகதிச் சீவன்கள் ஏங்கிக்கொண்டு அரைத் தூக்கத்திலும், கால் தூக்கத்திலும் இருந்த மற்றைய சீவன்களை தட்டித்தட்டி எழுப்பினர்.

பள்ளிக்கூட மண்டபத்தில் ஓசைக்கு உருவம் கொடுக்க முடியாத ஒருவிதக் குமைபு!

வெளிச்சங்களின் நட்டுக்கு நடுவே பச்சை நீலக்கொடி ஒன்று தெரிந்தது.

அந்தப் பச்சை நீலக்கொடியைக் கண்டதும் உத்தியோகத்தர்கள் துப்பாக்கிகளைத் தழ்த்திக் கொண்டனர்.

அந்தப் பச்சை – நீலக் கொடிக்குஉரியவர்கள் யாரென்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

சமீபத்தில்தான் அந்தச்சிறிய நகர்ப்புறத்தில் ''பொலிஸ் மக்கள் நல்லுறவுச் சபை'' என்ற பெயரில ஒரு ஸ்தாபனத்தை ஊரின் குறிப்பிடக் கூடிய முக்கியஸ்தர்களும், பொலிஸ் பகுதியினரும் இளைஞர் பிரிவினரும் சேர்ந்து அமைத்திருந்தார்கள். ''கட்சி வேறுபாடு காட்டாத ஸ்தாபனம்'' என்பதைக் குறிப்பிடுவதற்காகவே ஒருபுத்திசாலி அந்த நிறக்கொடியையே அமைப்பின் கொடியாகத் தீர்மானிக்கச் செய்திருந்தான்.

''அட அது நம்ம ஆட்கள்!''

இப்படி ஒரு தமிழ் உத்தியோகத்தன் தனது மனத் திருப்தியைத் தெரிவித்துக் கொண்டான்.

''உடன் பிறப்புகளே, நாங்கள் உங்கள் உதவிக்குத்தான் வந்திருக்கிறம்!'' என்று குரல் வைத்துக் கொண்டே ஒருவன் முன்னால் வந்தான்.

மண்டபத்தின் குமைச்சல் ஓசை தணிந்தது.

பத்துக்கு மேற்பட்டோர் வந்தனர். அவர்கள் நடுவயதுக் குட்பட்டவர்களாகவும், இளைஞர்களாகவும் இருந்தனர்.

வந்தவர்கள் கைகளில் எடுத்து வந்த 'பெட்ரோ மாக்ஸ்' லாம்புகளை அங்குமிங்குமாக வைத்து விட்டு பாடசாலைக்குள் வந்துவிட்டனர்.

தூக்கம் கலைந்த குஞ்சு குருமான்கள், கிழடு கட்டைகள் எல்லோருமே எழுந்து நின்று எல்லோருக்கும் மரியாதை செய்தனர்.

''ஐயா சாமீங்க, நாம பயந்து நடுங்கிட்டம் சாமி! பரதேசிப்பயங்க இங்கிட்டும் வந்திட்டாங்கெண்ணு ஏங்கிச் செத்திட்டஞ் சாமி!''

இப்படி வயசான ஒருவன் பேசினான்.


''அப்படி நடக்க நாங்கவிட்டிடுவோமோ? நாங்களும் தமிழர்கள். உங்க உடம்பில அடிபட்டா உயிரை விடமாட்டோமா?''

இப்படி வந்தவர்களில் ஒருவன் பேசினான்.

''நீங்கபயப்பிடாம நித்திரையைக் கொள்ளுங்க. நாங்க காவலுக்கு நிக்கிறம்!''

இப்படி இன்னொருவன் கூறினான்.

''நித்திரை எப்படிச் சாமிவரும?'' இதுகூட்டத்திலிருந்து ஒரு குரல்; ''நீங்க பயத்தை விட்டிட்டு கண்ணை மூடினா நித்திரை தானா வந்திடும்!''



வந்தவர்களில் வேறொருவனின் குரல் இது!

''அட அதுக்கில்லைச்சாமி! நீங்க தலைக்கு ஒரு துண்டு பாணையும் ஒரு பழத்தையும் கொடுத்தனுப்பினீங்க! அது வயித்துக்குப் போதுங்களா? வயித்தைப் பிடிங்கிட்டெல்லே இருக்குதுங்க! நித்திரைவருங்களா?''

இப்படி முன்னையவனே மீண்டும் கேள்வி கேட்டான்.

''அந்தப்பரதேசி குடுத்த பாணைக் கொஞ்சங்கூடக் கொடுத்தானா! அந்தக் கசவாரம் இப்படித்தான் செய்வான் எண்டு எனக்குத் தெரியும்''

ஒருவன்முத்தாய்ப்பு வைத்து விட்டான்.

*

அப்பாடா கண்காணாத ஒரு மனிதனின் புண்ணியத்தில் ஒருநாள் விடிந்து விட்டது.

பொழுது உயர்ந்து வந்தது.

இன்றுவருவதாகச் சொன்ன – கண்ணுக்கு முன்னே வருவதாகச் சொன்ன மனிதக் கடவுளின் வருகைக்காக அவர்கள் காத்திருந்தனர்.

கண்ணுக்கெட்டிய தொலைவில் புழுதி மண்டலம் மேல் எழுந்து தெரிந்தது.

எல்லோர் கண்களும் மகிழ்ச்சியால் மலர்ந்தன.

ஜீப் வண்டி ஒன்று விரைந்து வந்து நின்றது.

வண்டியிலிருந்து ஒருவர் இறங்கினார்.

ஜீப்பின் முன்பக்கத்தின் நீல பச்சைச் சிறிய கொடி ஒன்று பறந்தது.

இருபக்கத்திலிருந்து வேறும் இருவர் இறங்கினர் அவர்கள் இவரின் மெய்ப்பாதுகாப்பாளர்களாக இருக்கவேண்டும்.

வந்தவர் பிரமுகர் என்று தெரிந்தது.

இரவு வந்தவர்கள் அவர் முன்னே சென்று தலையசைத்து அவரையே தங்கள் தலைவர் என்ற விதத்தில் அறிமுகஞ் செய்தனர்.

பொலிசார் அவருக்கு மரியாதை செய்வது போன்ற விதத்தில் நகர்ந்து மரியாதை செய்தனர்.

அதற்கு மேல் அவர்கள் எதுவும் செய்யக்கூடாது.

அவர்கள் உத்தியோகம் அப்படி.

வெள்ளை நீண்ட நெசனலுக்கு மேல் கிடந்த வெண்துகில் சால்வையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார் பிரமுகர்.

அவர் அந்த மக்களுக்காக கவலைப்படுகிறார்; அவரின் ஊழியக்காரர்களும் அவர் கவலையில் பங்கு கொள்கின்றனர்.

சற்று வேளைக்குப் பின்பு அவர் மனந்திறந்து பேசினார்.

தமிழ இரத்தம் கொதிப்பது நன்றாகத் தெரிந்தது.

'சிங்களக் காடையர்கள் என்ன நினைத்துக் கொண்டார்கள்? பார்த்து விடுவோம்!''

## இரு வாரக் கதை

வந்தவர்களில ஒருவன் மற்றவனின் காதுவரை சற்றுப் பலமாகக் கூறினான்.

''அப்படீனா அது நீங்க அனுப்பவில்லையா?''

வேறொரு அகதி கேட்டான்.

''நம்மடை தலைவர் குடுத்தனுப்பியிருந்தா இப்பிடி அரும்பொட்டாக் குடுத்தனுப்புவாரா? இவன் ஒரு கசவாரப் பரதேசி! இவன்தான் இஞ்சத்தைச் சேர்மன் எண்டு சொல்ல வெக்கமாக்கிடக்கு! உங்கடை கெட்டகாலத்துக்கு நம்மடை ஐயா போனமுறை தோத்துப் போனார்! வெண்டிருந்தார் என்டா......''

இப்படித்தான் அவனுக்குப் பதில் கிடைத்தது.

''சரிசரி ஒருமாதிரிச் சரிக்கட்டுக்குங்கோ! இண்டையப் பாடுபோகட்டுக்கும் நாளையப் பாட்டுக்கு நங்கள் இருக்கிறம்; ஐயா வாறனெண்டவர்; வருவார்.''

இப்படித்தான் அவர் பேசி முடித்தார். பேச்சைப் பூரணத்துவப்படுத்த அவர் குரல் இடந்தரவில்லை; அது தழதழத்து அடைத்துக் கொண்டது.

இதற்குப்பின் அவர் நீண்ட நேரம் அங்கு நிற்கவில்லை.

சாத்திரப்படிக்கு வரவேண்டும்; வந்து விட்டுப் போய்விட்டார்.

''இண்டைக்கு உங்கடை சாப்பாடு என்ரை கணக்கு'' என்று வாக்குறுதி சொல்லி விட்டுத்தான் அவர் சென்றார்.

''பாவம் இந்தமனிசன் ஒரு நாப்பத்தஞ்சு வோட்டுக்கூட எடுத்திருந்தா வெண்டிருக்கும்! வெண்டிருந்தா இப்படிக் கொத்த காரியத்துக்கு உயிரை யெல்லோ விட்டிருக்கும்!''

இப்படித் தொண்டர்களில் ஒருவன் பச்சாதாபப்பட்டான்.

—6-ஆம் பக்கம் பார்க்க

## மதியும் பிறையும்

# நாடக எழுத்தாளர் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலே நடைபெற்ற விழாவொன்றிலேதான் ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களை முதன் முதலில் சந்தித்தேன். அப்பொழுது அவரது 'நிறைகுடம்' நாடகம் பலமுறை மேடையேறி வெற்றியீட்டிய காலகட்டம் என்று ஞாபகம். உரையாடிய போது ஏ. ரி. பொ. அவர்களும் ஒரு நிறைகுடமாகவே எனக்குத் தோன்றினர். பேச்சிலும் எழுத்திலும் 'வளவளா' தன்மையில்லாத இறுக்கத்தை நான் அவதானிக்க முடிந்தது. பின்னர் முள்ளியவளை பாரதி இலக்கிய மன்றம் நடத்திய சிலப்பதிகார விழாவில் பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

1968–69 ஆம் ஆண்டுகளில் என்று நினைக்கின்றேன். 'வெற்றிமணி' என்னும் சஞ்சிகையில் ஏ. ரி. பொ. வின் 'நாடகம்' என்னும் ஓரங்க நாடகம் தொடராக வெளிவந்தது. ஒரேகாட்சியில் அமைந்த இந்த நாடகத்தை முள்ளியவளை இளைஞர்கள் மேடையேற்றிய போது அதனைப் பார்வையிட்டேன். அப்பொழுதுதான் ஏ. ரி. பொ. அவர்களின் நாடக எழுத்துத் திறனை நன்கு உணரமுடிந்தது. ஒரு குடும்பம். ஒருகளம், ஓரே காட்சி. பாத்திரங்கள் வந்து பேசிக் கொண்டிருந்தனர். அலுப்புத்தட்டாத விதத்தில் பல்வேறு சுவை நிரம்பிய நாடகமாக அது இருந்தது. இதன்

**முல்லைமணி**

கையெழுத்துப் பிரதிக்குக் கலைக் கழகப் பரிசில் கிடைத்தது.

1977 ற்குப் பிறகுதான் ஏ. ரி. பொ வுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இரசிகமணி கனக. செந்திநாதனின் அந்தியேட்டி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைத் தமிழ் விழா, நூல் வெளியீட்டு விழாக்கள், கருத்தரங்குகள், பூபாலசிங்கம் புத்தகசாலை இப்படி பல இடங்களிலும் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சந்திக்கும் போதெல்லாம் நாடகம் பற்றியே பேசுவார். இளம் வயதில் நாடகத் துறையில் ஈடுபாடு காட்டிய பலர், வயது ஏற நாடகக் கலைக்கே முழுக்குப் போட்டிருப்பதை நான் அறிவேன். ஏ. ரி. பொன்னுத்துரையோ என்றால் வயது ஏற, ஏற நாடகத்துறையிலே அதிகம் ஆர்வம் காட்டுவதைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை. நாடக அரங்கக் கல்லூரி தயாரித்த நாடகமொன்றில் ஐம்பது வயதின் பின்னும் தோன்றி நடித்ததைக் கண்டேன். இந்நாடகத்தை நெறிப்படுத்தியவர் ஏ. ரி. பொ வை விடப் பத்து வயது இளையவரான தாசீசியஸ் அவர்கள். தாசீசியஸின் கண்டிப்பான நெறியாள்கையில் பொறுமையுடன் பயின்று ஐம்பது வயதுக் கலைஞர் மேடையில் தோன்றுகிறார். எத்தனை நாடகங்களில் நடித்திருந்தாலும், எத்தனை நாடகங்களைத் தயாரித்திருந்தாலும், எழுதியிருந்தாலும் தற்பெருமையற்ற அடக்கத்தைத்தான் அவரிடம் காண முடியும்.

### கலைப்பேரரசு

ஏ. ரி. பொ. அவர்களின் நடிப்பை 1950 இல் பார்த்த கலையரசு அவர்கள் "என்னைப் போல் ஒருத்தனை இன்றைக்குத்தான் காண்கிறேன்" எனப் பாராட்டியுள்ளார். ஏ. ரி. பொ. அவர்கள் பல நாடகங்களை எழுதியுள்ளார்; தயாரித்துள்ளார்; நெறிப்படுத்தியுள்ளார். நாடகம் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்; கருத்தரங்குகளில் பங்கு பற்றியுள்ளார்; நாடகத்துறையில் பல பரிசோதனை முயற்சிகளைச் செய்துள்ளார்; நாடகப் பிரதிகட்குக் கலைக்கழகப் பரிசு பெற்றுள்ளார். 'அரங்கும் அவையும்' என்னும் தொடர் கட்டுரையை எழுதினர். இத்தனை ஆற்றலும் அறிவும் நிறைந்த கலைப்பட்டதாரியான ஏ. ரி. பொவுக்கு கலையரசு அவர்களே மனமுவந்து சூட்டிய பட்டந்தான் 'கலைப் பேரரசு' என்னும் கௌரவப் பட்டமாகும்.

### நாடகப்பிரதி எழுத்தாளராக

இருபத்தைந்து நாடகப் பிரதிகள் வரை எழுதியுள்ள ஏ. ரி. பொ. வின் 'இறுதிப் பரிசு' 'நாடகம்', 'கூப்பியகரங்கள்', 'பக்திவெள்ளம்' ஆகியவை நூலுருப் பெற்றுள்ளன. 'நாடகம்' ஓரங்க நாடகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தொகுத்த 'சிந்தனைச் செல்வம்' என்னும் நூலின் அநுபந்தமாக ஏ. ரி. பொ. வின் 'பக்திவெள்ளம்' இணைக்கப்பட்டுள்ளது. விதியின் சதி, இருமனம், பண்பின்சிகரம், நிறைகுடம், செங்கோல் சரிந்தது, அண்டல் ஆறுமுகம், காதல் கைநட்டம், ஆயிரத்தில் ஒருவர், பிற்பகலில் ஆகியவை இவர் எழுதித் தயாரித்து நடித்த நாடகங்களில் சிலவாகும். 'தாளக்காவடி' என்னும் நாடகம் இவருக்கு வெற்றியைத் தந்த இன்னொரு படைப்பாகும். இளம்வயதிலே தாளக்காவடி ஆட்டத்தில் பெற்ற பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு கிராமியக் கலைக்கு மதிப்புக் கொடுக்கும் முறையில் அமைந்தது இந்நாடகமாகும். பல வானொலி நாடகங்களை எழுதியும் நடித்தும் வந்துள்ள இவர் ஒரு பிறவிக் கலைஞர்.

### நடிகராக

1950 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பல நாடகங்களில் தோன்றி நடித்த ஏ. ரி. பொ. தனது முதல் நாடக அநுபவத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"...பரமேஸ்வராகக் கல்லூரியில், பிரபல பிரான்சிய நாடகாசிரியர் மோலியரின் 'லோபியின் காதல்' நாடகம் இருதடவைகள் மேடையிடப்படுகின்றன. லோபியாக முக்கிய பாத்திரம் தாங்கும் தனிப்பேறு எனக்குக் கிடைக்கிறது. அரங்கேற்றத்தன்றே ஈழத்து நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பாராட்டுகிறார்கள் ........ ஆறுமாத ஒத்திகை – நீண்ட மண்டபமானாலும் ஒலிபெருக்கி இன்றி உரத்துப் பேசி நடித்த தனைமை முதல் ஒத்திகையின் போதே மேடையேறறத்துக்கு உபயோகித்த 'பணப்பெட்டி' 'மாடிப் படிக்கட்டு' என்ற 'செற்றிங்' பொருள்களை உபயோகித்தமுறை இன்னோரன்ன பல ஒழுங்குகளுடன் நடாத்தப்பட்ட நாடகத்தில் நடித்ததை எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன".

1960ஆம் ஆண்டில் கொழும்பு 'லைனல் வெண்ட்' தியேட்டரில் மேடையேறிய 'பதுயூர் ராணி' நாடகத்தில் அரசனாக நடித்த ஏ. ரி. பொவை அப்போதைய வானொலிச் சிங்கள, ஆங்கில நாடகப் பகுதி டைரக்டர்கள் பாராட்டினார்கள். சுதந்திரன் பத்திரிகை விமர்சனத்தில் 'சபாஷ் பதுயூர் அரசன்' எனப் பாராட்டப்பட்டார்.

பட்டப்படிப்புக்காக சென்னை சென்றபோது (1951 – 1955) இந்தியாவின் பல்வேறு இன மக்களைப் பிரதிபலிக்கும் அவையின் முன்னே 'முதலாளி தொழிலாளி', 'சூவேனி', 'ராகி மைடியர்' ஆகிய நாடகங்களில் நடித்துப் பாராட்டுப் பெற்றார். நாடகத்துறையிலே ஈடுபாடுடைய பல கலைஞர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர் இவர். கலையரசு சொர்ணலிங்கம் அவர்களுடன் வானொலி நாடகத்தில் நடித்துள்ளார்; தேவனின் 'கற்புக்கனல்' நாடகத்தில் 'வஞ்சிப்பத்தனாக'த் தோன்றிச் சக்கை போடு போட்டார். நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் பின்னணி இசையுடன் கூடிய 'இருமனம்' நாடகத்தில் அபாரமாக நடித்தார். கலாஜோதி சண்முகநாதன் அவர்கள் இவரின் ஆரம்பகால குருவாகத் திகழ்ந்தவர்.

### பிற ஆக்கங்கள்

நடிகரும் நாடக எழுத்தாளரும், தயாரிப்பாளரும பேச்சாளருமாகிய ஏ. ரி. பொ. நாடகத்துறைபற்றிய பல கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் 'பாடசாலை நாடகம்' என்னும் பெயரில் நூலுருப் பெற்றுள்ளது. 'அரங்கு கண்ட துணைவேந்தர்', என்னும் இவரது நூல் பேராசிரியர் 'வித்தி'யின மணிவிழாவின் போது குரும்பசிட்டியில் வெளியிடப்பட்டது.

### கட்டுப்பாடான வாழ்க்கை

சாதாரணமாகக் கலைஞர்களிடம் பல குறைபாடுகளை நாம் காணலாம். பெரும்பாலும் இக்குறைபாடுகள் ஒழுக்கம் பற்றியதாகவே இருக்கும்; 'அரிதாரம் பூசுபவர்களை நம்

—7-ஆம் பக்கம் பார்க்க

## 'சீயை' விழுந்த குளம்

வன்னிநாட்டில் வரலாற்று முக்கியத்துவமுள்ள பல இடங்களின் பெயர்கள் அழிந்து இப்போது அவ்விடங்களுக்குப் புதுப்பெயர்கள் தோன்றியிருக்கின்றன. 'கற்சிலை மடு' என்று ஒரு இடம். போய்ப்பார்த்தால் இங்கே ஒரு நடுகல் நாட்டியிருக்கிறது. அதில் 'பண்டார வன்னியனை வென்ற இடம்,' என்று ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது.

ஆனால் அதே இடத்தில் மிகப் பழைய கட்டடங்களின் அழிபாடுகள் காணப்படுகின்றன. இந்துக்கோயில் இருந்த அடையாளம் இருக்கிறது.

'கற்சிலைமடு' என்ற பெயர் தோன்றுவதற்கு முன் அந்த இடத்துக்கு வேறு ஏதோ ஒரு பெயர் இருந்திருக்கவேண்டும். வன்னியில் புதுப் பெயர்கள் உண்டாவது சகஜம்.

உதாரணமாக, 'சீயை விழுந்த குளம்' என்று ஒன்று இருக்கிறது. சி ஐ (C I.) என்பது கோப்பிரட்டிவ் இன்ஸ்பெக்டர் (Co-operative Inspector) என்பதன் சுருக்கம். ஒரு முறை ஒரு சி ஐ சங்கக்கடைப் பரிசோதனைக்குப் போய்விட்டுத் திரும்பும்போது – நல்லவெறி! அந்தக் குளத்தில் தவறி விழுந்துவிட்டார். அன்று தொடக்கம் அந்தக் குளத்துக்கு சீயை விழுந்த குளம்' என்று பெயர் வைத்துவிட்டார்கள்!

★ குட்டிக்கதை

# அடிமைகள்

யோ. பெனடிக்ற்பாலன்

ஓர் ஆட்டுக்குட்டி புல்நிலத்தில் புல் மேய்ந்து கொண்டு நின்றது. அது தனியாக நிற்பதைக் கண்ட ஓநாயொன்று மெல்ல மெல்ல அதன் கிட்ட வந்து குந்திக்கொண்டது. அதை ஆட்டுக்குட்டி காணவில்லை. சிறிது நேரம் குந்தியிருந்த ஓநாய் "இந்தச் சிறு பயலை வலியச் சண்டைக்கிழுத்து பயங்காட்டிக் கொன்று தின்றால் இதமாயிருக்கும்" என எண்ணி,

"ஏய் ஆட்டுக்குட்டி! அற்ப பயலே!" எனக் கூப்பிட்டது. ஆட்டுக்குட்டி நிமிர்ந்து பார்த்தது.

"இது என்னுடைய புல் நிலம்; என்னுடைய அனுமதியின்றி நீ எப்படிப் புல்தின்னுவாய்?" என்று ஓநாய் அதட்டியது.

ஆட்டுக்குட்டி கொஞ்சம் பதற்றமடைந்தாலும் நிதானம் இழக்கவில்லை. 'இந்த ஓநாய் என்னைக்கொன்று தின்னத்தான் வந்திருக்கு. நான் இதை எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும் கொல்லத்தான் போகுது. இவைகளின் கொடுமைகளை எவ்வளவு காலந்தான் பொறுக்கிறது, எனத் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு நின்றது.

"ஏய் கீழ்மகனே! என்ன பேசாமல் நிற்கிறாய்?" என ஓநாய் வெருட்டியது.

"புல்நிலம் நிச்சயமாக உன்னுடையதில்லை. நான் புல்லுத் தின்னுவேன். உன்னால் என்ன செய்துவிட முடியும்?" எனக் கூறிய ஆட்டுக்குட்டி கம்பீரமாய் நின்றது.

ஓநாய் திடுக்குற்றுப் போய் விட்டது. அது எதிர்பார்க்கவேயில்லை. ஆட்டுக்குட்டியைக் கூர்ந்து பார்த்தது. பார்க்கப் பார்க்கப் பயம் அதிகரித்தது. அது எழுந்து சற்றுத் தூரத்தில் சென்று உட்கார்ந்து சிந்தித்தது ஒருநாளும் நடவாத விஷயம். இந்த ஆட்டுக்குட்டி என்னை எதிர்க்கத் துணிந்து விட்டதே? அதன் முகத்திலேயே கொலை வெறி தெரியுது. "நான் கிட்ட நெருங்கினால் அது என்னைக் கொன்றாலும் கொன்று போடுமோ?" என மூளையைப் போட்டுக் குழப்பி ஆட்டுக் குட்டிக்குக் கிட்டச் செல்லத் தயங்கிக் கொண்டிருந்தது. முன்னால் ஒரு அடி எடுத்து வைக்க முடியவில்லை.

ஓநாய் கிட்டவரத் தயங்கியதைக் கண்ட ஆட்டுக்குட்டிக்கு துணிவு அதிகரித்தது.

"நாங்கள் சாதுவாய் இருப்பதனால்தான் இவை எங்களைக் கண்ட இடத்தில் கொன்று இரையாக்கினம். சாகிறது சாகிறதானே! அநீதியை எதிர்த்துச் சாவோமே!" என முடிவு கட்டி ஓநாய் இருக்கும் பக்கமாக தலை நிமிர்ந்து வீராப்புடன் நடக்கத்தொடங்கியது. அது நடந்து வருவதைப் பார்த்த ஓநாய்,

"அது ஆட்டுக்குட்டியா? பார்க்கப் பயங்கரமாக இருக்கிறது" என்று கூறி வந்த வழியே கால் தெறிக்க ஓடிக்கொண்டிருந்தது.

ஈழமுரசு

## கள்ளங்கபடமற்ற பிஞ்சுகளின் அசைவும் செயலுமே இந்தநாடகம்

# தாடி ஆடு




கலாநிதி. மௌனகுரு. திரு. சிதம்பரநாதன் நெறியாள்கையில் 'தாடி ஆடு' சிறுவர் நாடகம் (பிரதி: குழந்தை) யாழ். பல்கலைக்கழக கலைப் பேரவை சார்பில் கைலாசபதி கலையரங்கில் கடந்த 5ம் திகதி மேடையேறியது. இசை: கண்ணன்.

சிறுவர் நாடகத்திற்கிருய பல்வேறு பண்புகளையும் உள்ளடக்கி சிறந்த நெறியாள்கையில் மேடையேறிய இந்நாடகம் சிறுவர் நாடக வளர்ச்சிக்கு மட்டுமல்ல இம்மண்ணுக்குரிய நாடக வடிவத்தைத் தேடும் அயராத முயற்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பெனக் கருதப்படக்கூடியது.

மேடையை நிறைத்துக் கொண்ட 33 பாலர்களின் உன்னத படைப்பு, 'தாடி ஆடு'. மேடை முழுக்கப் பாலர்கள், வண்ண மலர்களைப் போல துள்ளியாடும் பிள்ளைகள் ஆடுகளாய், மான்களாய், கரடிகளாய், மயில்களாய், மரங்களாய் இடியாய், மின்னலாய், பிள்ளைகள் படைத்த புதிய உலகம் 'தாடி ஆடு'. யாழ். மொஸ்கோ பாலர் பாடசாலை மாணவ மாணவியர் தம் நடிப்பாற்றலை அழகாக வெளிப்படுத்தனர்.

அது ஒரு சிறுவர் நாடகமல்ல சரியான சிறுவர் நாடகமாக இருந்தமையால் அதன் அழுத்தமும் வேகமும் சிறுவர் நாடகத்தையும் கடந்து செல்லக் கூடியது அத்திறன் நாடகப் பிரதியிலும் நெறியாளர் ஆற்றலிலும் மட்டுமல்ல, ஒரு சுமையாகவும் திணிப்பாகவும் அன்றி, இயல்பாகவும் சரளமாகவும் சிறுவர்கள் ஓடியும் பதுங்கியும், பாய்ந்தும் சீறியும், மிருகமனிதர்களாய் பல்வேறு கோலங்கள் காட்டியும் ஒரு இனிய சித்திரத்தை மேடையில் வரைய எடுத்த முயற்சி அது. நாடகத்தின் நேர்த்திக்கு இன்னும் மெருகேற்றப்பட வேண்டியனபற்றி ஆலோசனைகள் நூறு சொல்லமுடியும். இக்குறைபாடுகள் நெறியாளர் உணராதனவல்ல. எமது வளங்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்துக் கலையாக்க முடியாதிருக்கும் எமது சமூகத்தின் கலையார்வமின்மையையே இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்ட வேண்டும். வளங்களை ஒன்று சேர்க்கப்பணம் தேவை. இன்றைய எமது தேடல் இவற்றை இன்னும் அழகாக்கும் கச்சிதம், நேர்த்தி, அது உடையில், பாடலில், இசையில் கூத்து முறையில் என்று குறை காணுவதில் அல்ல; அது சுலபம். ஆனால் இவற்றிற்கு அப்பால் இந்த வண்ணங்களுக்கெல்லாம் ஆதாரமான அடிப்படை நாடக 'ப்ரேம்' செவ்வையாய் அமைந்துள்ளதா என்பதே. இதனைச் சரியாக உணர்ந்துள்ள படைப்பாக 'தாடி ஆடு' அமைந்துள்ளது என்று கூறுவதே இப்போது அவசியமானது.

பாணிமைப்படுத்தப்பட்ட (Stylized) இந்நாடகம் கூத்து மரபு, ஆடல் பாடல் கதை கூறுவோர், பாடற்குழுவினர் என்ற பல்வேறு உத்திகளையும் முறைகளையும் பயன்படுத்தி கதையை நாடகமயப்படுத்தித் தருதல் என்பதில் அது காட்டும் தெளிவான அக்கறையே இங்கு நம் கவனத்தைக் கவர்வது கதையின் கனம், அதன் போக்கு, என்பனவற்றிற்கமைய கதை கூறுவோர். இயங்குவதும் இங்கு சிறப்பாகக் கூறக்கூடியது.

மிருகங்கள் ஒவ்வொன்றுமே சிறப்பாகத் தம் பணிகளைச் செய்துள்ளன. ஆனால் பாதி நாடகத்தில் சிலிர்த்துப் பாய்ந்துவரும் சிங்கத்தின் மேடைப்பிரவேசம் சிங்கபாகுவின்'' தந்தைச் சிங்கத்தின் 'சிறுபடைபோ' இச் சிங்கம் என்று லயிக்கத் தூண்டுவது இயல்புதான். இந் நாடகத்தைத் தூக்கி நிறுத்தும் கம்பீரம் சிங்கத்தின் ஆடும்முறை உரையாடல் நடிப்பு என்பவற்றோடு ஒன்றிக்கலந்ததாகும்.

கதை கையாளப்பட்டவிதம் சிறுவர் நாடகம் என்ற முழுக் கவனத்தோடும்தான் என்ற போதும், அதிகப் பிரசங்கத்தனமும் விரசமும் இன்றி எளிய சிறுவர் என்ற வட்டத்துக்குள்ளேயே நுணுக்கமும் உயர்வும் கொண்ட நடிப்பாற்றல் உரையாடல்களினூடாக 'மனிதமயப்படுத்தலில்' அந் நாடகம் காட்டியுள்ள சில நிலைகள் வியத்தற்குரியன.

சிறுவர் நாடகம் என்பது வெறும் 'பொது உளவியலி'ன் வரையறைகளை மட்டும் நிறைவு செய்வதாயிருக்க வேண்டியதில்லை. அது ஒரு நாடகமாகவே இருக்கலாம். வெறும் ஆடுகளும் நரிகளும், மான்களும், மயில்களுமா அந் நாடக பாத்திரங்கள். ஆடான மனிதர்களும், நரியான மனிதர்களும், சிங்கமான மனிதர்களும்தான் அவை. பாசம், அன்பு எளிமை குதூகலம் மட்டுமல்ல கோபம், ஏமாற்று, மோசடி, தந்திரம், தந்திரத்தை வெல்லும்தந்திரம், சூழ்ச்சி, கழுத்தறுப்பு எல்லாமே கணப்பொழுதில் எளிமையாய் மின்னலாய் மாறிச் செல்கின்றன.

கள்ளங்கபடமற்ற குழந்தைகளின் ஒவ்வொரு அசைவும் செயலும் இனிய நாடகமே தான். அதையே நாடக இலக்கண நெறியுள் – குழந்தைகளின் இயல்பையும் சுதந்திரத்தையும் இறுக்கி அமுக்காது – இசையாய், கூத்தாய், நடிப்பாய், அவர்களின் குதூகலமாய் மலரச் செய்யும் போது, 'தாடி ஆடுகள்' சிறந்த நாடகமாகின்றது.

**எம். எஸ். எம். அனஸ்**
**விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்**

---

# மீண்டும் அவள் மடியில்...

இரவுக் கன்னியின்
இதமான நெஞ்சத்தில்
இனிதே தலைசாய்த்து
இமைகளை மூடி–கண்
துயிலும் வேளை
கனவுகள் ஆயிரம்
வந்து வந்து போகும்
ஆளுக்கு ஏற்றாற் போல்
அக்கனவும் அமையும்
வாலிபக் கனவில்
வனிதையின் ஸ்பரிசம்
வயோதிபக் கனவில்
வாழ்ந்துவிட்ட நிழல்கள்,
இளமை இதயம்
விம்மி விம்மி தணியும்
முதுமை நெஞ்சில்
பெருமூச்சின் விசிறல்
இதனையும் எப்போது?
அன்றிந்த மண்ணில்
அமைதி தவழ்ந்த வேளை,
அன்பு மலர்ந்த காலம்.
இன்றிங்கே ஏக்கங்கள்
பற்பல விதங்களில்,
வாலிபக் கனவில்
வனிதைகள் இல்லை
காக்கியுடையும்
கனமான துப்பாக்கியும்
வயோதிபக் கனவில்
கவச வண்டியில்
தன் பிள்ளை
சிறைபுகும் காட்சி,
இத்தனை மாட்சியுடன்
இரவு நங்கைதனை துறந்து
காலை மலர
கதிரவன் ஒளிபரப்ப
அடுத்த வேளைச்சோற்றுக்கு
ஆர்வமுடன் அடிகோலிட
பணிசெய்யும் இடம்நாடி
பறந்தோடிச் சென்று
முதல் தம் கடமையாக
நம்மண்ணில் மலரும்
இருநாளிதழைப் புரட்டி
''இவ் பீடத்தில் எல்லோர்க்கும்
நெஞ்சில் ஓர் நிமிர்ப்பு''
எம் தமிழ் மாந்தர்கள்
எங்கெங்கே எத்தனை
ஏந்திய குண்டுகளால்
உயிர்களை துறந்தன,
முடிசைகள் கோபுரங்கள்
தீக்கிரையாகின–தீநாக்கினால்
தீய்ந்து போயின,
தாலியிழந்தவர்
தனயனைத் துறந்தவர்
தார்மீகச் சந்தையிலே
கூடி ஓலமிடும்
கோலமதை கண்ணுற்று
குமுறும் நெஞ்சத்துடன்
காலைக் கதிரவன் தந்திட்ட
தென்பும் பறந்திட
எத்திசையிலிருந்து
எம் உயிரைப் பறிக்கும்
துப்பாக்கி குண்டுகள்
பாய்ந்து வருமோவென
தவிக்கும் நெஞ்சத்துடன்
கடமையயாற்றிவிட்டு
மீண்டும் அவள் மடியில்
ஏக்கத்துடன் விழுகின்றோம்.

★ **யாழூர் துரை**

---

## உள் ஈரம்...

— 4-ஆம் பக்கத் தொடர்

சரியாகப் பத்து மணிவரையில் காலை உணவைச் சுமந்து கொண்டு ஒஸ்ரீன் கார் ஒன்று வந்து சேர்ந்தது.

தொண்டர்கள் அவைகளை எடுத்து எல்லோருக்கும் பரிமாறினர்.

எல்லோருக்கும் திருப்தியான உணவு; போதுமான உணவு

மதிய உணவு வேண்டாம் போல இருந்தது. ஆயினும் காலை உணவைப் பறித்து விட்டுச் சென்ற கார் ஐயாவின் மத்தியான உணவையும் இரண்டு மணிவரையில் கொண்டுவந்து சேர்த்தது.

மாலை வந்து கொண்டிருந்தது.

தொலைவில் பல வாகனங்கள் வருவது தெரிந்தது.

பல பிரமுகர்கள் வந்து சேர்ந்தனர்.

மூவர்ணக் கொடியுடன்
ஒன்று!
கற்பகத் தருக் கொடியுடன்
ஒன்று!
நந்திக் கொடியுடன் ஒன்று!
உத்தியோக பூர்வமான அரசாங்கச் சிங்கக் கொடியுடன்
ஒன்று!

மாகாண அரசு அதிகாரி, பொலீஸ் மேலதிகாரி, கிராம சேவைச்சங்க அதிகாரி பட்டினசங்கத் தலைவர் ''சோஷல் சேவீஸ்'' திணைக்களமாகாணத் தலைவர், பட்டின சங்க உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், —இப்படி எல்லோருமே கூட்டுச் சேர்ந்து வந்துவிட்டனர்.

இத்தனை பேர்களும் வந்து சேர்ந்த வண்டிகளுக்குப் பின்னால் ஒரு வண்டி நிறைய மாலை உணவுப் பார்சல்கள் வந்தன.

சற்று வேளைக்குப்பின் ஒரு உதயசூரியன் கொடியுடன் ஜீப் வண்டி ஒன்று வந்து சேர்ந்தது.

எம் பி. வருகிறார்.

அவர் கண்கள் உப்பிப் போயிருந்தன.

நாலைந்து நாட்களாக அவர் கண்மூடாமல் இருந்திருக்க வேண்டும்!

அவர் இப்போது தான் பாராளுமன்றத்திலிருந்து தனது தொகுதிக்குள் உள்ள வீட்டுக்கு வந்து சேர்ந்த கையுடனேயே அகதிகள் முகாமுக்கு காற்றாய்ப் பறந்து வருகிறார்.

சகலருமே இடம் விட்டு நகர்ந்து அவருக்கு மரியாதை செய்கின்றனர்,

அவர் சாவதானமாகக் கையமர்த்திக்கொண்டார்.

அகதிகளை நோக்கிக்கண்களைப் பறக்க விட்டார்.

கைக்குட்டையை எடுத்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

இதுவரை அவர் தொகுதிக்குள் உள்ள மூன்று அகதிகள் முகாம்களுக்கு விஜயம் செய்துவிட்டு வந்திருக்கிறார்.

அவர் மனது மரத்துப் போய் இருக்க வேண்டும்!

அதனால்தான் கைக்குட்டைக் கண் துடைப்போடு மட்டும் அவர் நின்று விட்டார்.

வந்திருந்தவர்களையெல்லாம் அவர் ஓரிடத்திற்கு அழைத்தார் சுருக்கமாக இரண்டு வார்த்தைகள் பேசினார் அவருடன் வருகை தந்த அவரின் காரியதரிசி குறிப்புப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் குறிப்பெழுதத் தொடங்கி விட்டார்.

வந்திருந்தவர்கள் எல்லோரும் நான்முந்தி நீமுந்தி என்ற தோரணையில் தங்கள் தங்கள் அமைப்புக்களின் பெயர்களையும், தனியானவர்கள் தங்கள் தனிப் பெயர்களையும் காரியதரிசியின் குறிப்புப் புத்தகத்தில் பதிய வைத்தனர்.

மொத்தமாக எட்டு நாட்கள் நிறைப்படுத்தப்பட்டு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாட்கள் வரையறுக்கப்பட்டன.

அகதிகளுக்கான எட்டுநாள் பராமரிப்பு தானத்தில் ஒவ்வொரு நாள் பங்கினையும் எடுத்துக் கொண்டதில் எல்லோருக்குமே பெருமை!

எம். பி ஐயாவுக்கோ சகலரையும் விடப் பெருமை.

எப்படியோ ஒருவாற உணவுப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டுவிட்ட பெருமை!

அவரின் கார் புறப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய கார்களும் புறப்பட்டுவிட்டன.

பொழுது கருகிக் கொண்டு வந்தது. பகல் பொழுது டியூட்டி முடிந்து உத்தியோகத்தர் புறப்படும்போது இரவு டியூட்டிக்காரரின் ஜீப்வந்து சேர்ந்தது.

புதிதாகப் பல தொண்டர்களும் வந்து சேர, பகல் தொண்டர்கள் விடைபெற்றுக்கொண்டனர்.

புதிய தொண்டர்கள் பெற்றோல்மாக்ஸ் லைற்றுகளை அங்கு மிங்கும் ஏற்றிவைத்தனர்; மாலை உணவை எல்லோருக்கும் பரிமாறத் தொடங்கி முடித்து விட்டனர்

தங்கள் சொந்தப் பாவனைக்காக அவர்கள் வரும்போது தனித்தனிப் பார்சல்களை எடுத்து வந்திருந்தனர்.

''இப்ப என்ன அவசரம் நாங்கள் பத்துமணிக்கு மேலை சாப்பிடுவம்!''

இப்படி ஒரு தொண்டன் சொன்ன அபிப்பிராயத்தை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

மத்தியான உணவு எடுத்து அது சரியாகச் செமிபாட்டுக்குப் போவதற்கிடையிலேயே இரவு உணவையும் எடுத்துவிட்டதனால் வந்த அலுப்பில் எல்லா ஜீவன்களும் விழுந்து படுத்துவிட்டன.

மண்டபத்துக்கு வெளியே இரண்டு இடங்களில் இரண்டு லாம்புகளை எடுத்து வைத்துத் தொண்டர்கள் பொழுதைக் கழிக்கத் தொடங்கிவிட்டனர்.

இரண்டு கடதாசிக் கூட்டங்கள் போடப்பட்டன.

மொத்தமாகத் தொண்டர்கள் நால்வர் இருந்தனர்.

நால்வர் ஒரு கூட்டத்தில் குந்திக்கொண்டனர்

ஒருவன் தான் போர்த்திருந்த சால்வையை எடுத்துக் கீழ போட விளையாட்டுத் தொடங்கிவிட்டது.

மூன்றூற்றுநாலு!

காவல் உத்தியோகத்தர் நால்வரும், மனம் பொறுக்க மாட்டாது பக்கத்துக்கு வந்து சேர்ந்து விட்டனர்.

அவர்களுடன் சேர்ந்தால் மொத்தம் எட்டுப் பேர்கள்!

சரியாக இரண்டு கூட்டத்திற்குக் கணக்குச் சரியாக இருந்தது.

இதைச் சரியாகக் கணக்கிட்டுக் கொண்டுதான் தொண்டர்கள் இரண்டு கூட்டங்களைக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

''ஐயா அவைகளை தனிச்செற்றாக இருக்கவிடுகிறது சரியில்லை, பங்கிட்டு இருப்பம்!'' என்றான் ஒருத்தன்.

''ஓமோம் இவ்விரண்டு பேராய்ச் சேத்துக் கொள்ளுவம்'' என்றான் மற்றவன்.

பிரச்சினை தீர்ந்தது.

அவர்களில் ஒருவன் வேறு இனத்தவன். ஆனாலும் அவனுடன் சேர்ந்து மூன்நூற்று நாலுவிளையாடுவது அவ்வளவு கஷ்டமாகப்படவில்லை.

(அடுத்த வாரம் முடியும்)

ஈழமுரசு



# பாரதத்தின் ஆதரவின்றி இலங்கையில் தமிழ் அரசு நிறுவுவது கடினம்

'ஃபார் ஈஸ்ரேன் றிவியூ'வின் 1985 பெப்ரவரி 21-ம் திகதிய இதழில் 'ரெட்னி டாஸ்கர்' எழுதிய கட்டுரையின் முழுமையான தமிழாக்கம் இது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழர்களுள் மிதவாதத் தலைமைத்துவத்தினைப் பிரதிபலிப்பவர்கள். இந்நாட்களில் இவர்களும், தமிழ் கெரில்லா இயக்கத்தினரான இளைய தலைமுறையினரும் ஒரே தோணிக்குள் இருக்கின்றனர்.

தற்போதைய ஐந்து முக்கிய கெரில்லா "இயக்கங்களி"லும் குறைந்த பட்சம் ஆயுதபாணிகளாக இரண்டாயிரம் ஆட்கள் உள்ளனர் என்பது ஒரு மதிப்பீடு. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தினர் மத்தியில் வரவர மேன்மேலும் ஜனரஞ்சகமான ஓர் இயக்கம், அவர்கள் தனிவேறான ஓர் அரசைத் தமக்கென அமைக்க முனைந்து வருகின்றமையாகும். தமிழ் மக்களின் இதயம் நிறைந்த இத்தகைய இயக்கத்தினை அறவே ஒழிக்க அரசாங்கம் கங்கணம்கட்டி நிற்கிறது. அரசினது இப்பிரயத்தனத்தின் முழுத் தாக்கத்திற்கும் தாக்குப்பிடிப்பவர்கள் இந்த கெரில்லாக்களே ஆவர்.

இதேவேளை, தனித் தமிழ் அரசிற்காக வாதாடும் எக்கட்சியுடனும் தான் இப்பொழுது உரையாடத் தயாரில்லை என்று ஜனாதிபதி ஜூனியஸ் ஜெவர்த்தன 1985, ஜனவரி 21ஆம் திகதியன்று பிரகடனம் செய்துள்ளார் அல்லவா? இப்பிரகடனத்தின் பயனாக தமிழர் விடுதலைக் கூட்டணி அலைகடலில் அலைந்துலையும் படகு போல ஆகியுள்ளது.

'கூட்டணித் தலைமை தற்போது ஜெயவர்த்தனவுடன் கதைக்க இயலாதது ஆகிவிட்டமையால், தமிழ் நாடு அரசினது தலைநகராம சென்னையைத் தவிர தமக்கு வசிப்பதற்கு வேறு இடம் இல்லை என அது உணர்கிறது.

எனவே, தர்க்க ரீதியாக, த. வி. கூட்டணியானது தமிழ் கெரில்லாத் தலைமையுடன மேலும் அணிசார்ந்து விட வேண்டும் தனிவேறான தமிழ் ஈழம் அரசுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளிப்படையாக வெளிப்படுத்திய குறிக்கோள் ஆகும். தமிழ் கெரில்லாத் தலைமையின் நோக்கமும் அதுவே. ஆனால் நோக்கம் நிறைவேற, அது ஆயுதம் ஏந்தியுள்ளது. சமாதான இணக்க உரையாடல்கள் வாயிலாக கொழும்பு அரசாங்கத்திடமிருந்து உரிமைகளை ஈட்டிக்கொள்ள த. வி. கூட்டணி தவறியது. இவ்வாறு தவறியமை இளம் தமிழர்கள் மத்தியில் விரக்தியைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக, அவர்கள் கெரில்லா "இயக்கங்க"ளாக உருப்பெற்றனர்.

## இருவருடன் தனிப்பேட்டி

இந்நிருபர் சென்னையில் வைத்து திரு. அமிர்தலிங்கத்தையும் திரு. பாலசிங்கத்தையும் பேட்டி கண்டார். அப்பொழுது அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராவார், தலையாய கெரில்லா இயக்கங்களுள் ஒன்றாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஏ. எஸ். பாலசிங்கம். கொழும்பில் சாவகடசி மாநாடு முறிந்துபோனமை முதற்கொண்டு, இவ்விரு சக்திகளுக்குமிடையில அதற்கு முன்னரிலும்பார்க்க அதிக தொடர்புகள் இருந்தமையை இந்நிருபர் பேட்டியின் போது கண்டார். "போராளிகளுக்கும் சமாதான எதிர்ப்பு அலலது காந்தியத்தில் நம்பிக்கை வைத்திருப்போருக்கும் இடையில் ஏதாவது பிணக்கு ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ள நிச்சயமாக நாங்கள் முயல்வோம்" என உரைத்த அமிர்தலிங்கம், "அவர்கள் பயங்கரவாதிகளென நாம் நினைக்கவில்லை, அவர்கள் பயங்கரவாதிகள் என்று நாம் என்றுமே ஏற்றுக்கொண்டது கிடையாது. சிங்களவர்களுடன் தமிழர்கள் சகவாழ்வு வாழ இயலாது என்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணி." எனத் தொடர்ந்தார்.

பாலசிங்கத்தைப் பொறுத்தவரையில், அவர் எடுத்தியம்பியதாவது: "அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை நாங்கள் சந்தித்தோம். அவர்கள் தமிழர் விடயத்தில் தெட்டத் தெளிவான ஒரு நிலைமை மேற்கொள்ளும் நாள் வந்துவிட்டமையை அவர்களது மனதில் பதிய வைத்தோம், அவர்களுக்கு வேண்டியது என்ன என்பதை அவர்கள் குறித்துக்கூறவில்லை. இணக்க உரையாடல்கள் என்றுமே பயன்தரப் போவதில்லை. இதனை அவர்கள் வெளிப்படையாகப் பிரகடனப்படுத்துதல் வேண்டும். பிரகடனப்படுத்துமாறு அவர்களை நாங்கள் நெருக்குதல் வேண்டும் அத்துடன், தனிவேறான சுதந்திர அரசுகாண முயன்றுழைக்கும் வண்ணம் எமது மக்கள் அவர்களுக்கு வழங்கிய வாக்களிப்பு அதிகாரம் நிறைவேறவும் அவர்கள் செயலாற்ற வேண்டும். நாங்கள் இவற்றையெல்லாம் அவர்கள் நன்குணரவைத்தல் வேண்டும்." இவ்வாறு தெளிவுபடுத்தினர், பாலசிங்கம்.

## உடன்பாடு ஏற்பாடுமா?

இவ்விரு சக்திகளும் ஒருங்கிணைந்து செயற்படும தொடர்புறவு ஒன்றினை ஏற்படுத்துமோ ஏற்படுத்தாதோ, இவை இரண்டும் ஒரு உத்தேசத்தையிட்டு மாத்திரம் உடன்பாடு கண்டுள்ளன என்பது உண்மை. வட மாகாணத்தில் ஆயுதபாணிகளாக்கப்பட்ட சிங்களச் சமுதாயங்களைக் குடியமர்த்த உத்தேசிக்கும் அரசாங்கத்தின் திட்டங்கள், உள்நாட்டு யுத்த அபாயத்திற்கு வித்திடுகின்றன என்பதை இவை தம்முள் ஏற்றுக்கொண்டுள்ளன. "பேரபாயம் வாய்ந்த அரசாங்கத்தினது இந்தக் கொள்கை உள்ளூர்ப் போர் நிலைமைகளுக்கு நாட்டினை இட்டுச் செல்லும். இறுதித் தமிழர்வரை அரசாங்கத்தினது இக் கொள்கையை எதிர்த்தாக வேண்டும்" என உரைத்தார், திரு. அமிர்தலிங்கம்.

அரசாங்கத்தினுடைய மீளக்குடியமர்த்தும் திட்டத்தையிட்டு விமர்சித்த திரு. பாலசிங்கம், "இலங்கை அரசாங்கமானது ஓர் உள்நாட்டு யுத்தச் சூழ்நிலையைப் பிறப்பிக்கத வண்ணமாக இருக்கிறது என நான் எண்ணுகிறேன். ஓர் உள்ளூர்ப் போருக்கு இந்நாட்டு மக்களை அது அணிசேர்த்து வருகின்றது, நிலைபெற்றுள்ள அரசாங்கத்தைத் துச்சமாக மதித்து இவர்கள் நடக்கிறார்கள். இவர்கள் என நான் குறிப்பிடுவது அரசாங்கத்திலுள்ள இனவாத, கூலபமாகப் போருக்கு அறைகூவும் சக்திகளே ஆகும். இவர்களோடு பௌத்த பிக்குமாரும் சேர்ந்து நிற்கின்றனர். ஆபத்து மிக்க ஒரு பாதையில் இவர்கள் அடியெடுத்து வைத்தபடி நிற்கின்றனர்." எனக் கருத்து வெளியிட்டார்.

டொலர் கென்ற் படுகொலைகள் பற்றி ஒரு சுருக்க பகுப்பாய்வாக அமிர்தலிங்கம் கூறியவை வருமாறு: "இலங்கையின் வட மாகாணத்து முல்லைத்தீவுக்கு அண்மையில் டொலர் பண்ணை, கென்ற் பண்ணைகளில் ஆறு ஆண்டுகளாக இந்தியத் தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். அரசாங்கத்தின் குடியமர்த்தும் கொள்கையை அமுலாக்கும்முகமாக, துருப்புக்களை அங்கு அனுப்பியது அரசாங்கம். இந்த இராணுவத்தினர் இத் தமிழர்களைப் பலவந்தமாக வெளியேற்றினர். நீதிமன்றத்திற் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறைத் தண்டனைபெற்ற முன்னை நாட் சிறைக்கைதிகளான சிங்களவர்கள் டொலர், கென்ற் பண்ணைகளில் மீளக்குடியமர்த்தப்பட்டனர் இம்மீளக்குடியமர்த்தல் 1984 நடுப்பகுதியில் நடந்தது.

"அரசாங்கத்தின் இக்குடியமர்த்தல் திட்டம் ஆத்திரமூட்டும் ஒரு செயலாகும். எனவே இதற்கு அவசியமானது எனப் போராளிகள் எண்ணிய ஒரேயொரு காரியத்தைத்தான் அவர்கள் செய்தனர். ஏட்டிக்குப் போட்டியான பிரதிச் செயலுக்குத் தூபமிட்டன, இக்குடியமர்த்தல்கள். தமிழ் கெரில்லாக்களானோர் டொலர் பண்ணை, கென்ற் பண்ணைகளில் அரசாங்கம் இப்படிக் குடியமர்த்திய சிங்கள முன்னை நாட் குற்றவாளிகளான சிறைக் கைதிகளைப் படுகொலை செய்யுமுன்பே, அரச குடியமர்த்தற் திட்டம் ஆத்திரமூட்டும் ஒரு செயலாக அமைவதைச் சுட்டிக்காட்டி, நான் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தேன்." இவ்வாறு தமது நிலையை விளக்கினர் அமிர்தலிங்கம்.

## இனிமேல் பேச்சில்லை

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு நாடும் பொருட்டு, அரசாங்கத்துடன் மேலும் இணக்க உரையாடல்கள பற்றிய சாத்தியக் கூறுகளையிட்டு அமிர்தலிங்கம் நம்பிக்கை இழந்தவராகக் காணப்பட்டார். "தமது வாழ்வுப் பாதைகள் பிரிந்து செல்லும் கட்டத்திற்கு நாம் வந்துவிட்டோம்." என உரைத்தார் அவர். அத்தோடு வன்செயற் போக்குகள் வலுவடைதலைச் சூசகமாகச் சுட்டிக்காட்டும் பாங்கில், அவர் "இந்த அடக்கியொடுக்கு முறையினின்றும் எமது தமிழ் மக்களை நாம் விடுவித்தற்குப் போராடி வருகிறோம். இப்போராட்டத்தினைத் தொடர்வதைத் தவிர எமக்கு வேறு மாற்று மார்க்கம் கிடையாது," என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கொழும்புக்கு மீண்டனராயின், அவர்கள் "செயலியக்கம் இழந்தவராகி" விடுவார்கள். உள்ளபடியால் இச் சம்பவநிலை, தெற்றெனப் புலப்படும் ஒன்று. ஆகவே "நண்பர்களான வெளிநாட்டு அரசாங்கங்களை" அணுகி அவர்களது ஆதரவு திரட்டுவதே தமது கட்சி இவ்விடயத்தில் வகிக்கும் பங்கு, எனக் காண்கிறார், அமிர்தலிங்கம். போராளி இயக்கங்களானவை தமது "தாயகம்" விட்டு இலங்கை இராணுவத்தை விரட்டியடிக்க படைக்கலம் ஏந்திப் போராடி வருகின்றன. இப்போரில் அவை வெற்றியின் வாடையை ஏற்கனவே மோப்பம் பிடித்துள்ளன.

தமிழ் கெரில்லா இயக்கங்கள் ஐந்து உள்ளன. ஒருங்கிணைந்த ஒரு இயங்குமுறை பற்றி அவை இனிமேல்தான் தம்முள் உடன்பாடு காண வேண்டியவர்களாக இன்னமும் இருக்கின்றனர். இதே வேளை, 'புலிகள்' இயக்கமும் "ரெலோ" இயக்கமும் இலங்கையின் வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் புரிந்துவரும் கெரில்லா யுத்தம் வரவர மேன்மேலும் அதிக பலன் தருகிறது. "புளொட்" எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், பொறுத்திருந்து பெருஞ் சமரிடுவது சாலச் சிறந்தது என்கிறது. கொழும்பு ஆயுதப் படைகளை எதிர்த்து, சம்பிரதாயபூர்வமான, விரிவான முழுப்பலம் கொண்ட, போர் ஒன்றை முடுக்கிவிடுதல் அதன் உத்தேசம் ஏனெனில், 'நொட்டிவிட்டு ஓடி மறையும்' யுத்த தந்திரோபாயத்தால் இருதிக்கிலிருந்தும் சரமாரியாகப் பொழியும் குண்டுகளுக்குப் பலியாவோர், அப்பாவித் தமிழ்க் குடிசனங்களே. இவ்வாறு மாற்றுவழி காட்ட முனைகிறது. இந்த இயக்கம், தேற்றேற்ப எமமைத் தயார் நிலைக்கு மேம்படுத்த அவகாசம் தேவை. அதுவரை பொறுத்திருப்போம், என்கிறது "புளொட்" இயக்கம்.

## இயக்கங்கள் இணைப்புவேலை

எல்லா கெரில்லா இயக்கங்களினதும் தலைவர்களைக் கொண்ட ஒருங்கிணைந்த தமிழீழ இராணுவ ஏவல்கொள் கட்டுக்கோப்பு ("ஜொய்ன்ற் மிலிட்டரி கொமாண்ட்") ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பெற்று வருகின்றன, என பாலசிங்கமும் "புளொட்" பேச்சாளர் ராஜநித்தியனும் எமக்குச் செய்தி அறியத்தருகின்றனர். ஆனால் எமது பார்வைக்குப் புலனாகும் எதிர்காலத்தில் இது நிறைவேறும் சாத்தியக்கூறுகள் தெரியவில்லை காரணம், குறிக்கோள்கள், அவற்றை எய்தும் வழிமுறைகள் என்பவற்றையிட்டு இயக்கங்கள் தமக்குள் இழுபறிப் படுகின்றமையே ஆகும்.

இயக்கங்கள் எல்லாம், தாம் சோஷலிஸ்டுகள், அல்லது மார்க்ஸிஸ்டுகள் அல்லது இரண்டும் கலந்த சார்பு உடையோர் எனத் தம்மை வருணித்துக் கொள்கின்றன. உலகளாவிய இதே மனப்பாங்குடைய விடுதலைச் சக்திகளின் ஆதரவு ஈட்ட இது சிறந்தது என்பது ஏதோ அருமையானதுதான். ஆனால் வெற்றிகரமாக இப்படிப் போர்புரிந்து கொண்டே கெரில்லாக்கள் தனிவேறான ஒரு தமிழ் அரசு பெற முடிந்தால் அதன் பின்னர்தான் இருக்கிறது "விளையாட்டு' என்கிறார் பாலசிங்கம் அந்த நாளைப்பற்றிக் கூறுவதைச் சற்றுக் கேட்டுப்பார்ப்போம்; 'அதிகாரத்தைக் கைப்பற்றப் பல கட்சிகள் தமக்குள் போட்டியிடும், தமிழர் மத்தியில் இன்றும் நிலவும் குலவேறுபாடுப் பிரச்சினை அகற்றப்படும். அதன்பின்னர் பொதுத் தேர்தல்கள் நிகழும். அந்த அரசு, ஒரு ஜனநாயக மக்கள் அரசாக விளங்கும் நித்தியனின் அபிப்பிராயப்படி, அந்த அரசு, 'மக்களின் ஜனநாயகம்' எனப் பெயர்கொண்டு இருந்

—8ம் பக்கம் பார்க்க

## மறுமலர்ச்சிச்...

—3-ஆம் பக்கத் தொடர்

க. கா. மதியாபரணம், க. சண்முகம், நாவற்குழி: சு. வேலுப்பிள்ளை (சு. வே). க செ. நடராசன், குரும்பசிட்டி: கனக செந்திநாதன். கோப்பாய்: ச. பஞ்சாட்சரசர்மா, க. சரவணமுத்து, நயினாதீவு: ஆர். ஆர். பூபாலசிங்கம யாழ்ப்பாணம்: ரேவதி குப்புசாமி, வை ஏரம்பமூர்த்தி.

கூடி இருந்த எழுத்தாளர்கள் என்னையே தலைமை வகித்து நடத்துமபடி கேட்டுக் கொண்டனர். இது உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சியை அளித்தது, தமிழ்த்தாய் வணக்கப்பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி தி. ச. வரதராசன் பேசினர். 'புதுமைப்பித்தர்கள் சங்கம' என்றே பெயர் இருத்தல் வேண்டும் எனவும் வற்புறுத்தி அதையே பிரேரணை உருவத்தில் கொண்டு வந்தார். திரு. வை ஏரம்பமூர்த்தி அவர்கள் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' எனப் பெயர் இருத்தல் வேண்டுமென வாதாடி மறு பிரேரணையாகப் பிரேரித்தார். நானே அதை அனுமதித்தேன். பலரது அபிப்பிராயங்களுக்குப் பின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கமெனவே பெயர் இருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது.

உத்தியோகத்தர் தெரிவுநடைபெற்றது. போஷகர்களாகதிரு. சோ. சிவபாதசுந்தரம வர்கள், சே மசுந்தரப் புலவரவர்கள், நா. பொன்னையா அவர்கள். பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள், சிறுகதை எழுத்தாளர் சி வைத்திலிங்கம் அவர்கள் என்போர் நியமிக்கப்பட்டனர்.

தலைவராக அ. செ. முருகானந்தன் அவர்களும் உபதலைவராக சண்முகம அவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர் காரியதரிசியாக தி. ச. வரதராசன் அவர்களும், உபகாரியதரிசியாக அ. ந கந்தசாமி அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். தனாதிகாரியாக ரேவதி குப்புசாமி நியமனம் பெற்றார்;

இவர்களோடு வை. ஏ ஏரம்பமூர்த்தி, க. கா மதியாபரணம் என்போர் நிர்வாகசபை அங்கத்தினர்களாக தெரிவு பெற்றனர்.

(1973ம் ஆண்டில் வெள்ளியில் இடம்பெற்ற கட்டுரை)

## நடாக...

—5-ஆம் பக்கத் தொடர்

பக்கூடாது' என நாட்டுப் பழமொழியொன்றுண்டு. இவரது தனிப்பட்ட வாழ்க்கை பற்றி இரசிகைமணியின் கருத்தினைப்பார்ப்போம்:

"மவைக் கந்தனை வணங்கி கந்தசட்டி விரதம் இருந்து மிக்க ஆசார சீலர்களாக இருந்த பெற்றோர்களுக்குப் பிறந்தவர் திரு ஏ. பொ எனவே அவரது உதிரத்தில், எண்ணத்தில்- தெய்வபக்தி, ஒழுக்கம், நன்னடத்தை என்பன குடிகொண்டிருக்கின்றன. எதைச்செய்தாலும் இந்தத் தடத்தை விட்டுப் பிறழ மாட்டார். இவை அவரது கவசங்கள் -. மச்சமாமிசம், குடிப்பழக்கம் என்பவற்றை அவர் கனவிலும் கண்டறியார். நாடக உலகில் இப்படியிருப்பவர்கள் அருமையிலும் அருமை.

ஈழமுரசு

## பஸ் சேவை சீரில்லாததால் மாலையில் கடித வினியோகம்

(வேலணை)

தீவுப் பகுதிக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை குறைக்கப்பட்டதனாலும், மட்டுப் படுத்தப்பட்டதனாலும் இப்பகுதி தபால் சேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து வரும் கடிதங்கள் மற்றும் உள்ளூர் கடிதங்கள் ஆகிய இச்சேவை தடைப் படுவதால் உரிய நேரத்தில் கிடைக்காததால் பொது மக்கள் மிகுந்த சிரமமடைகின்றார்கள் தினமும் ஓரிரு பஸ் வண்டிகள் மட்டும் சேவையில் ஈடுபடுவதனால் சில நாட்களில் தபால் வினியோகம் மாலையில் நடைபெற வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது ஒழுங்கான பஸ் சேவையின்மையால் தபால் சேவை மட்டுமல்ல செய்திப் பத்திரிகைகளும் தாமதித்து வருவதுடன் சில வேளைகளில் வராமல் விடுவதும் உண்டு நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் தபால் விநியோகம் மேலும் மோசமான நிலையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி மன்றம் வழங்கும்:

# யாழ். நகரில் வீடு திருத்த, விஸ்தரிக்க மலசலகூட வேலைகளுக்குக் கடன் வசதி

நகர வீடமைப்பு உபநிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள், வறியவர்களுக்கு அவர்களது வீடுகளைத் தரமுயர்த்துவதற்கு, திருத்துவதற்கு, அல்லது விஸ்தரிப்பதற்கு மற்றும் மலசலகூடம் அமைப்பது, வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடமாக மாற்றுவது, சொந்த நீர்ச்சேவைகளை ஏற்படுத்துவது போன்ற வேலைகளைச் செய்வதற்காக மாநகரசபை மூலம் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கடன்களை வழங்குவதற்காக முப்பது இலட்சம் ரூபாவுக்கான ஒருதொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபைச் சூழலில் மேற்படி நகர வீடமைப்பு உபநிகழ்ச்சித் திட்டத்தினைச் செயற்படுத்துவது சம்பந்தமாக ஆராய்வதற்காக யாழ்ப்பாண மாநகரசபையின் குழுக்கூட்ட அறையில் மாநகர ஆணையாளர் திரு சீ வீ கே. சிவஞானம் அவர்களால் கூட்டப்பட்ட முதல் கூட்டத்தில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் திரு. தி. பூ. முருகையா உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

வீடுகளைத் தரமுயர்த்த, மலகூடம் அமைக்க, குடிமனையைத் தரமுயர்த்த, வீடுகளை திருத்த அல்லது விஸ்தரிக்க மற்றும் வாளிமலகூடங்களை நீரடைப்பு மலகூடமாக மாற்ற எந்த அடிப்படையில் கடன்கள் வழங்கப்படவுள்ளன என்பதையும், மேற்படி கடனுக்கு அறவிடப்படவுள்ள வட்டி விகிதங்கள் மற்றும் எத்தனை தவணைப் பணங்களாகக் கடன்கள் திரும்பச் செலுத்தப்படல் வேண்டும் என்பன போன்ற தகவல்களை உள்ளடக்கும் சம்பந்தப்பட்ட அறிவித்தலை நகர மண்டபத்தில் பிரதான வாசலில் போடப்பட்டிருக்கும் விளம்பரப் பலகையில் காணலாம்.

எழுத்துமூலமான பூர்வாங்க விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டதும், நகர வீடமைப்பு உப-நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொருத்தமான கடனுக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான படிவங்கள் பின்பு அவர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது. கடன்கள் வழங்கல் கடந்த காலத்தைப் போலல்லாது இவ்வாண்டு உள்ளூராட்சி மன்றமும், தேசிய வீடமைப்பு அதிகார சபையும் ஒன்றிணைந்து செயற்பட்டுப் பரிசீலித்து வழங்குமெனவும் அறியப்படுகின்றது.

## தூதுவர் மட்டத்தில் இனி இல்லை

இந்தியவுக்கும் இலங்கைக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் இனிமேல் இருநாட்டுத் தூதுவர்களினதும் மட்டத்தில நடைபெறாதென்றும், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் மட்டத்திலேயே நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பலமாதங்களாக இருநாட்டுத் தூதுவர்களும் கடிதங்களை எடுத்துச் செல்லும் நிலையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்தது. இப்போது பாரத வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரமேஷ் பண்டாரி இலங்கை வருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிவினையை எதிர்ப்பதற்கு மலையகத்தில் அமைப்புகள்

மலையகத்திலுள்ள தமிழ்-சிங்கள தோட்டத் தொழிலாளர்கள பிரிவினைக்கு எதிரான அமைப்புகளை நிறுவிவருகின்றனர் முதலாவது அமைப்பு பண்டாரவளையில நிறுவப்பட்டது.

நாட்டின் இறைமையையும், ஒற்றையாட்சி முறையையும் பாதுகாத்து தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்தப்போவதாக இந்த அமைப்பு பிரதிநிதிகள் குழு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்களைச் சந்தித்த அமைச்சர் பிரிவினையை பகிரங்கமாக கண்டித்து தமிழ் மக்கள் நாட்டைப் பாதுகாக்க இது ஒரு சந்தர்ப்பம் எனவும். தோட்டங்களில் பிரிவினைக்கு எதிரான இயக்கங்களை அமைக்க தமது முழு ஆதரவும் கிடைக்கும் எனச் சொன்னார்.

இக்குழுவினர் நாட்டிலுள்ள தோட்டங்களில் இவ்வாறான அமைப்புக்களை நிறுவும்படி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

## இந்தியாவின் பாக்-தூதுவர்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கான இந்தியாவின் புதிய தூதுவராக திரு. எஸ் கே. சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது அவுஸ்திரேலியாவில் பாரதத் தூதுவராகப் பணியாற்றி வருகின்றார்.

### எச்சரிக்கை...

—1ம பக்கத் தொடர்

தாம் தயாராகவிருப்பதாக சட்டத்தரணி இரா. ஜ இராஜேஸ்வரன் தங்களாலும் 'ஈழமுரசு' மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே.

இந்தக் கடிதத்தைத் தாங்கள எழுதவில்லை என்றும், இவ்வாறான கடிதங்களை எழுதுபவர்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தங்களுடைய பெயரைப் பாவிப்பவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுப்பதாகவும் 'புளொட்' இயக்கத்தினர் தம்மிடம் தெரிவித்துள்ளதாக சட்டத்தரணி இரா. ஜ இராஜேஸ்வரன் நேற்றுப் பிற்பகல தெரிவித்தார்.

### தமிழகம் பயணம்

(கொழும்பு)

முன்னாள் பட்டிருப்பு எம். பி திரு. பூ. கணேசலிங்கம் நேற்று முன்தினம் தமிழகம் பயணமானார். மன்னார் முன்னாள் எம். பி. திரு. பி. சூசைதாசன் நாளை தமிழகம் செல்கின்றார்.

### தமிழக...

—1ம் பக்கத் தொடர்

தலைவர் திரு. சுப்பிரமணியம் பேசுகையில், சர்வகட்சித் தூதுக் குழுவொன்று புதுடில்லி செல்ல வேண்டியது அவசியமாகி வருகின்றது என்று தெரிவித்ததுடன், மத்திய அரசு காலம் தாழ்த்தாது இதில் தலையிட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

### வழிமறித்து...

—1ம பக்கத் தொடர்

என்ற இடத்துக்குச் சென்ற லொறி வழிமறிக்கப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதலில லொறி உரிமையாளரான அப்புத்துரை என்பவர் கத்திக் குத்துக்கு இலக்காகி வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரிடமிருந்த பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

### இரு வீடுகள்...

—1ம் பக்கத் தொடர்

முற்றுகையிட்டுச் சோதனையை மேற்கொண்டனர்.

நாமகள் வித்தியாசாலை அமைந்திருந்த பகுதியே தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும், சிலர் தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சோதனை நடவடிக்கைகளைத் தொடர்ந்து திடீரெனக் கேட்ட குண்டுவெடிப்புச் சத்தத்தை அடுத்து இரண்டு வீடுகள் முற்றாகத் தகர்ந்தன. இரண்டு வீடுகளும் நாமகள் வித்தியாசாலைக்குப் பின்புறமாக உள்ளவையாகும்.

குறிப்பிட்ட ஒரு வீட்டிலிருந்து பொருட்கள் மீட்கப்பட்டதாகவும், வாகனங்களும் அகப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனராயினும், பின்னர் பலரும் விடுதலை செய்யப்பட்டனராம்.

### அமைச்சரவை...

—1ம பக்கத் தொடர்

பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது பற்றியும அமைச்சர் தொண்டமான் வலியுறுத்தினார். இருநாட்டுத் தலைவர்களும் 'உச்சிமாநாட்டில்' சந்தித்து கொள்வது பற்றியும, இதனால் இனப்பிரச்சினைத் தீர்வு இலகுவானதாக அமையும் என்பது பற்றியும அமைச்சர் எடுத்துச் சொன்னார்.

இவ்விடயங்களை மந்திரி சபைக் கூட்டத்தில் எடுத்துச் சொல்லுமாறும், அங்கு விரிவாக ஆராயலாமென்றும் ஜனாதிபதி ஜெயவர்த்தன, அமைச்சர் தொண்டமானிடம் தெரிவித்தார், அனேகமாக இம்மாதம் இருபதாம் திகதி நடைபெறும மந்திரிசபைக் கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான் தனது இந்திய விஜயம் பற்றி எடுத்துக்கூறுவார்.

### பாரதத்தின் ...

—7ஆம் பக்கத் தொடர்

தாலும், அது ஒரே-கட்சி அரசாங்கவ திகழும.

### முஸ்லிமகள் கூட்டாட்சி

இவ்விரண்டு கெரில்லா குழுக்களும் தாய'புரட்சிகர இயக்கங்களை'' இலங்கையின சிங்களச் சமுதாயத்தினர் மத்தியில ஊக்குவிப்பார் என்றனர் இந்நாட்டினது மொத்தச் சனத்தொகையினரில ஏழு சத விகிதமானோர் முஸ்லிம்கள். தமது அரசுடன் சேருமபடி முஸ்லிமகளுக்கு அழைப்புவிடுக்கப்படும எனவும், அப்படிச் சேர்ந்தால், அவர்களுக்கு ஒரு வகையான கூட்டாட்சித் தன்னுரிமை வழங்கப்படும் எனவும இரு குழுக்களும உத்தேசம தெரிவித்தன.

இலங்கையில் வசிக்கும் முஸ்லிமகளில் பெருந்தொகையானவர்களின மூதாதையர் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இங்கு வந்தோர் ஆவர். ஆகையால அவர்கள் உத்தியோக பூர்வமாக ''மூர்ஸ்'' என அதாவது சோனகர் என, அழைக்கப்படுவர். அவர்களுடைய வசிப்பிடங்கள் பெரும்பாலும் கிழக்கு மாகாணத்திலும, வடக்கு மாகாணத்திலும் உள்ளன. சிங்களச் சமுதாயத்தினரிடத்தும் தமிழ் சமுதாயத்தினரிடத்தும் காணப்படும ஆவேசக் கொள்கைகளை அவர்கள் அச்சத்துடன் நோக்குவதாக அறியப்படுகிறது.

இந்தியாவைத் தமது காவல் தெய்வம போலக் கருதுகின்றனர் தமிழ்ப் போராளிகள். ஒரு தனி அரசு நிறுவுதலில் போராளிகள வெற்றி காணும் பட்சத்தில், புதுடில்லியின் நிலை இக்கட்டானதாக இருக்கும். கெரில்லாக்களின் சுய ஆதிக்க உரிமைக்கு இந்தியா கணிப்பு வழங்கும் என்பதும் அவர்களது திட நம்பிக்கை, ஆயினும, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய பிராந்தியப் பிரிவுகள சம்பந்தமாக மிக அணைமையிலேயே இந்தியாவுக்கு உற்ற பிரச்சினைகளை முன் வைத்து நோக்கினால், தெற்கு ஆசியாவில் அத்தகைய இன்னுமொரு பிரிவு உருவாதலைப் பிரதம அமைச்சர் ராஜீவ் காந்தியின் அரசாங்கம் விரும்புமா. அதற்குத் தனது நல்லாசிகளை அது வழங்குமா? இவை ஐயத்திற்கு இடமானவையே இவை எப்படி இருப்பினும், பாரத மாதாவின் ஆதரவின்றி இலங்கையில ஒரு தனித் தமிழ் அரசின் ஆட்சி நடைபெறுவது கடினமாக இருக்கும்.

### வர்த்தகர்கள்..

—1ம் பக்கத் தொடர்

என்பது தெரிவிக்கப்படவில்லை என்றும் இதே வட்டாரங்கள் பேலும தெரிவித்தன.

''இவ்வாறான கடத்தல்களில ஈடுபடுபவர்கள் தங்களை யார் என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும இல்லாவிடில் கடையடைப்பை தொடர்ச்சியாகச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

ஆள் கடத்தல் தனியார் வர்த்தக நிலையக் கொள்ளைகள, காரணமற்ற தாக்குதல்களைக் கண்டித்து வந்த யாழ்ப்பாண வர்த்தகர்கள திடீரென மேற்கொண்ட சாத்விக நடவடிக்கையினால் வெளியிடங்களிலிருந்தும், தூரப் பகுதிக் கிராமங்களிலிருந்தும் பொருட்களை வாங்கவென வந்த பெரும் தொகையானோர் ஏமாற்றத்துடன திரும்பிச் சென்றனர்.

ஒரு சில கடைகள் முற்பகலின போது ஒற்றைக் கதவில் திறந்திருந்தன வாயினும் வர்த்தகர்கள் மட்டுமன்றி, சில இளைஞர் இயக்கப் பிரதிநிதிகளும சென்று கேட்டுக்கொண்டதன்பேரில அந்தக் கடைகளும இழுத்து மூடப்பட்டன. இதனால் நகரம் சோபையிழந்து காட்சியளித்தது.

### மீண்டும்..

— 1ம் பக்கத் தொடர்

சாலையில் நேற்று முன் தினம் பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. துப்பாக்கிகள சகிதம் உள்ளே சென்றவர்கள் இன்டர் கொம் தொலைபேசிகள், டீசல் ஆகியவைகளை எடுத்துச் சென்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

### விசாரணை----

—1ம் பக்கத் தொடர்

ஒருவர் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகவும், பின்னர் அவரது வீட்டிலிருந்து நகைகளை எடுத்துக் கொண்டு அவரை விடுவித்ததாகவும் தெரிய வந்துள்ளது வாகன விவகாரங்கள் தொடர்பான விசாரணைக்காகவே இவர் கொண்டு செல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது.

## மரண அறிவித்தல்

### எஸ். வீ. எஸ். நவரட்ணம்

எஸ் வீ.எஸ். நவரட்ணம் (ஓய்வு பெற்ற கணக்காளர், ஆற்றுப பள்ளத்தாக்குகள் அபி. சபை) காலமானார். இவர் டெய்சியின அன்புக் கணவரும் சிருந்தினி மாலினி, ராஜன், ரவி ஆகியோரின் அன்புத் தந்தையும் வேதநாயகம (மலேசியா), அலோய் இராஜநாயகம (நைஜீரியா) ஆகியோரின் அன்பு மாமனுருமாவார் இறுதிக் கிரியைகள 18ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 30 மணிக்கு கனத்தையில் நடைபெறும்.

இல. 13 6ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

''ஈழமுரசு'' சாயிபாபா அடவைடைசிங் அசே சியேற்ஸ் ஸ்தாபனத்தாரால 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில 17-3-85 ஞாயிறுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336